
மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்




மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் - 60 - 2011

# இந்திய உச்ச நீதிமன்றம்

## உரிமையியல் விசாரணை பிரிவு

## உரிமையியல் மனு எண்கள் 6015–6027/ 2011

# தமிழ் நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி சட்டம் குறித்த இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

மனுதாரர்கள்
தமிழக அரசு மற்றும் இதரர்......

எதிர் எதிர்மனுதாரர்கள்
கே.சியாம் சுந்தர் மற்றும் இதரர்.....

**தீர்ப்பு**

**1. டாக்டர். பி.எஸ். சவுஹான், ஜே.**

சென்னை உயர்நீதிமன்றம் 2011ம் ஆண்டின் 12882, 12890, 13019, 13037, 13038, 13227, 13293,13296, 13345, 13381, 13390, 13547 ஆகிய ரிட் மனுக்கள் மற்றும் W.P.(M.D) எண்.6143,2011 மீது 18.07.2011 அன்று அளித்த தீர்ப்பு மற்றும் ஆணையை எதிர்த்து இந்த முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் 2011 தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி சட்டத் திருத்தத்தின் (இனி அது சட்டத் திருத்தம் என்று குறிப்பிடப்படும்) 3வது பிரிவை தள்ளுபடி செய்தது. 2010ம் ஆண்டின் தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்விச் சட்டத்தை (இனி அது 2010 சட்டம் என்று குறிப்பிடப்படும்) செயல்படுத்த வேண்டும் என்று மாநில அரசுக்கு ஆணையிட்டது. அதாவது பொதுப் பாடத்திட்டத்தை செயல்படுத்தவும், சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்களை விநியோகிக்கவும் 22.07.2011 அன்று அல்லது அதற்கு முன்னதாக வகுப்புகளைத் தொடங்கவும் உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. இந்த நீதிமன்றம் (உச்ச நீதிமன்றம்) 14.06.2011 அன்று பிறப்பித்த ஆணையை செயல்படுத்தக் கூடாது எனக் கோரி நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

**2. தகவல்கள்:**

**A.** தமிழ்நாடு மாநிலத்தில் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வியை அரசு வாரியம், மெட்ரிக்குலேசன் வாரியம், ஓரியன்டல் வாரியம், ஆங்கிலோ – இந்திய வாரியம் ஆகிய 4 வெவ்வேறு வாரியங்கள் வழங்குகின்றன. ஒவ்வொரு வாரியமும் தனக்கென சொந்தமான பாடத்திட்டத்தை வைத்திருந்தது, வெவ்வேறு பாடப்புத்தகங்களை பரிந்துரைத்தது. வெவ்வேறு வாரியங்களின் கீழ் தரமான கல்வி வழங்குவதில் இருந்த ஏற்றத் தாழ்வை நீக்குவதற்காக மாநில அரசு சமச்சீர் பள்ளிக் கல்விக்கான பரிந்துரைகளை வழங்க ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழு தனது அறிக்கையை 04.07.2007 அன்று ஒப்படைத்தது. பின்னர் அந்தக் குழு அளித்த ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் செயல்படுத்துவதற்காக மற்றொரு குழு நியமிக்கப்பட்டது.

**B.** இதனிடையே குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 (இனி அது 2009 சட்டம் எனக் குறிப்பிடப்படும்) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 01.04.2010 முதல் நடைமுறைக்கு வந்தது. அந்தச் சட்டம் 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அருகமைப் பள்ளி ஒன்றில் தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் அதாவது 8ம் வகுப்பு வரையில் இலவசமாக கட்டாயமாக கல்வி வழங்க வகை செய்கிறது. பாடத்திட்டமும் தேர்ச்சி முறையும் ஒரு கல்வி சார்ந்த ஆணைய அமைப்பால் உருவாக்கப்பட்டு உரிய மாநில அரசால் அறிவிக்கை வெளியிடுவதன் மூலம் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று சட்டம் 2009 கூறுகிறது. இந்த கல்வி சார்ந்த ஆணைய அமைப்புச் சட்டம் 2009ன் பிரிவு 29ல் கூறப்பட்டுள்ள பல்வேறு அம்சங்களை கவனத்தில் கொண்டு

பாடத்திட்டத்தையும் தேர்ச்சி முறையையும் உருவாக்கும். 2009 சட்டத்தின் 34வது பிரிவு மாநில ஆலோசனைக் குழு ஒன்றை அதிகபட்சம் 15 உறுப்பினர்கள் கொண்டதாக அமைக்க வழிசெய்கிறது. குழுவின் உறுப்பினர்கள் தொடக்கக்கல்வியிலும் குழந்தைகள் மேம்பாட்டிலும் அறிவும் அனுபவமும் உள்ளவர்களிடையேயிருந்து நியமிக்கப்படுவார்கள். சட்டம் 2009ன் விதிகளை பயனுள்ள முறையில் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை மாநில அரசுக்கு மாநில ஆலோசனைக் குழு வழங்கும்.

**C.** 29.08.2009 அன்று கூடிய தமிழக அமைச்சரவைக் கூட்டம் மாநிலத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் சமச்சீர் கல்வி முறையை அரசு செயல்படுத்துவது என்றும், தற்போதுள்ள 4 வாரியங்களை ஒருங்கிணைத்து ஒரே வாரியமாக உருவாக்குவது என்றும் 2010–11 கல்யாண்டில் ஒன்றாம் வகுப்பிலும் ஆறாம் வகுப்பிலும் சமச்சீர் பாட முறையை வழங்குவதற்கான பாடப்புத்தகங்களைக் கொண்டுவருவது என்றும், இரண்டாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலும், ஏழாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் 2011–12 கல்வியாண்டில் சமச்சீர் பாடப் புத்தகங்கள் கொண்டுவருவது என்றும் முடிவு செய்தது. அமைச்சரவையின் இந்த முடிவைச் செயல்படுத்த நிர்வாக மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறாக தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி அவசரச்சட்டம் 2009, 27.11.2009 அன்று பிறப்பிக்கப்பட்டது. அது 30.11.2009 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது. அந்த அவசரச்சட்டம் பின்னர் 2010 சட்டம் ஆக 01.02.2010 அன்று மாற்றப்பட்டது. 2010 சட்டம் மாநில பள்ளிக் கல்வி பொது வாரியம் (இனி அது வாரியம் என்று குறிப்பிடப்படும்) அமைக்க வழி செய்கிறது; சட்டத்தின் விதிகளையும், அல்லது அதன்படி பிறப்பிக்கப்படும் ஆணைகளையும் வேண்டுமென்றே மீறினால் தண்டனை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வழிசெய்கிறது (பிரிவு 11 ) ; அது தொடர்பாக நிறுவனங்கள் செய்யும் குற்றங்களுக்கு தண்டனை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வழி செய்கிறது (பிரிவு 12); வாரியத்திற்கு அவ்வப்போது கொள்கை விசயங்களில் ஆணைகள் பிறப்பிக்கவும் மாநில அரசுக்கு இச்சட்டம் அதிகாரம் அளிக்கிறது, அந்த ஆணைகளுக்கு வாரியம் கட்டுப்பட்டதாகும் (பிரிவு 14).

**D.** சட்டம் 2010ன் பிரிவு 3 இந்தச் சட்டம் பின்வருமாறு செயல்படத் தொடங்கும் என்று கூறுகிறது:

(a) ஒன்றாம் வகுப்பிலும் ஆறாம் வகுப்பிலும் 2010 – 11 கல்வியாண்டிலும்

(b) இரண்டாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலும் ஏழாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் 2011–12 கல்வியாண்டிலும் செயல்படுத்தப்படும்.

(c) சட்டத்தின் துணைப்பிரிவு (2), மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு பாடத்திலும் கற்பித்தல் தொடர்பாக வாரியம் நிர்ணயிக்கும் நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும், தேர்வுகள் நடத்துவது தொடர்பாக வாரியம் தீர்மானிக்கும் நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் கூறுகிறது. ஒன்றாம் வகுப்பிற்கும் ஆறாம் வகுப்பிற்குமான பாடத்திட்டங்களையும், பாடப்புத்தகங்களையும் வாரியம் 22.03.2010 அன்று அங்கீகரித்தது. தமிழ்நாடு பாடநூல் கழகம் 31.03.2010 அன்று பிறப்பித்த ஆணையின் அடிப்படையில் பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டன.

**E.** சட்டம் 2010 ன் பல்வேறு பிரிவுகள் செல்லத் தக்கவை அல்ல என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் 14 ரிட் மனுக்கள் வரையில் தாக்கல் செய்யப்பட்டன. உயர்நீதிமன்றத்தின் ஒரு டிவிசன் பெஞ்ச் 30.04.2010ல் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் ஆணையின் படி சட்டத்தின் 11,12,14 ஆகிய பிரிவுகள் அரசமைப்பு சாசனத்திற்கு எதிரானவை எனக்கூறி அவற்றைத் தள்ளுபடி செய்தது. அதே நேரத்தில் 2010–11 கல்வியாண்டில் ஒன்றாம் வகுப்பிற்கும் ஆறாம் வகுப்பிற்கும் 2011–12 கல்வியாண்டு முதல் அல்லது மற்ற வகுப்புகளுக்கான முறைகளையும் பாடத்திட்டங்களையும் மாநில அரசு உருவாக்கி பாட நூல்களை தயாரிக்கும் வரையில் மற்ற வகுப்புகளுக்கும் பொதுப் பாடத்திட்டத்தையும் பாடநூல்களையும் செயல்படுத்துவதற்கு விரிவான ஆணைகளைப் பிறப்பித்தது. 2009ம் ஆண்டுச் சட்டத்துடன் ஒத்திசைந்ததாக 2010 சட்ட விதிகளை கொண்டுவருவதற்கும் 2009 சட்டத்தின் கீழ் கல்வி ஆணையம் மற்றும் மாநில ஆலோசனைக் குழு அகியவற்றை அறிவிப்பதற்கும் மாநில அரசுக்கு மேலும் சில ஆணைகளை நீதிமன்றம் பிறப்பித்தது. அரசு உதவிபெறாத தனியார் பள்ளிகள் தங்களுக்குப் பொருத்தமான புத்தகங்களைத் தேர்வு செய்ய ஏதுவாக அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்களை மாநில அரசு அறிவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் ஆணையிட்டது. பள்ளிகள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய ஆங்கிலம், தமிழ், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய 5 பாடங்களுக்கு மட்டுமே பொது / சமச்சீர் பாடத்திட்டம் பொருந்தும், துணைப்பாடத் திட்டப் பாடங்களுக்குப் பொருந்தாது என்றும் அரசு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் பணித்தது. உயர்நீதிமன்றத்தின்

மேற்படி தீர்ப்பு இந்த நீதிமன்றத்தால் 10.09.2010 தேதியிட்ட நீதிமன்ற ஆணையின்படி முறையாக அங்கீகரிக்கப்பட்டது. இதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு மனுக்கள்(SLP) அனைத்தையும் இந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

**F.** 2010 சட்டத்தையும் இந்த நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட தீர்ப்பையும் செயல்படுத்துவதற்காக மாநில அதிகாரிகள் இரண்டாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான பாடத்திட்ட உள்ளடக்கங்களையும், ஏழு மதல் பத்தாம் வகுப்பு வரையிலான பாடத்திட்ட உள்ளடக்கங்களையும் ஒரு வல்லுநர் குழுவிடம் ஒப்படைத்து அதன் கருத்தைக் கேட்டனர். அரசு பள்ளிகளிலும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் சமச்சீர் பள்ளிக் கல்வி முறைக்காகத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டமும் மற்றும் பயிற்சி திட்டமும், அதேபோல் 2 முதல் 5ம் வகுப்பு வரையிலான சமச்சீர் கல்வி பாடநூல்களும் 7 முதல் 10ம் வகுப்பு வரையிலான சமச்சீர் கல்வி பாடநூல்களும் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டன.

**அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்களது பொருளாதார, சமூக அல்லது பண்பாட்டுப் பின்னணியின் காரணமாக எவ்வித பாகுபாடுமின்றி தரமான கல்வி கிடைக்கச் செய்வதற்காக சமச்சீர் கல்வி முறையை செயல்படுத்த தமிழக அரசால் 2010 சட்டம் நிறைவேற்றப்பட்டது.**

**G.** எனினும் 16.05.2011 ல் மாநில சட்டமன்றத்திற்கு நடந்த பொதுத்தேர்தலைத் தொடர்ந்து மாநிலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. சம்பிரதாய நடைமுறைகளுக்குப் பிறகு மாநில அரசு 2010 சட்டத்தில் 2011 சட்டத்திருத்தத்தின் படி திருத்தம் கொண்டுவந்தது. அதன்படி பிரிவு 3 விலக்கப்பட்டு ஒரு புதிய பிரிவு சேர்க்கப்பட்டது. அரசாங்கத்தால் அரசிதழில் அறிவிக்கப்படுகிற கல்வியாண்டில், 1 முதல் 10ம் வகுப்பு வரையில் ஒவ்வொரு பாடத்திற்கும் வாரியம் வரையறுக்கிற பொதுப் பாடத்திட்டத்தை பள்ளிகள் பின்பற்ற வேண்டும் என்று அந்தப் பிரிவு கூறுகிறது. வெவ்வேறு வகுப்புகளுக்கு வெவ்வேறு கல்வியாண்டுகளை அரசாங்கம் அறிவிக்கக் கூடும். 2010 சட்டத்தில் 11,12,14 பிரிவுகள் அரசமைப்பு சாசனத்திற்கு எதிரானவை என்று உயர்நீதி–மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் அந்தப் பிரிவுகளை இந்த சட்டத்திருத்தம் நீக்கியுள்ளது.

**H.** புதிய கல்விப்பருவம் 01.06.2011ல் தொடங்கிவிட்டது, 2011 திருத்தச் சட்டம் 07.06.2011 அன்று நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதால் இந்த சட்டத்திருத்தத்தை எதிர்த்து ஏராளமான ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 2011 திருத்தச் சட்டம் செயல்படுத்தப்படுதை உயர்நீதிமன்றத்தின் ஒரு டிவிசன் பெஞ்ச் 14.06.2011 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணையின் மூலம் நிறுத்தி வைத்தது. எனினும் பொதுப்பாடத்திட்டம், பொதுப்பாடநூல்கள் குறித்து ஒரு விரிவான ஆய்வு நடத்த மாநில அரசிற்குச் சுதந்திரம் அளித்தது. பாடபுத்தகங்களில் கூடுதலாகச் சேர்க்கவோ, திருத்தி அமைக்கவோ, மாற்றி அமைக்கவோ பாடப்புத்தகத்தில் எந்த ஒரு தலைப்பு, பத்தி அல்லது பகுதியை மாற்றியமைக்கவோ மாநில அரசிற்கு அதிகாரம் உண்டு என்று 2011 திருத்தச்சட்டம் கூறுகிறது. மேலும் தனியார் பள்ளி நிர்வாகங்கள் தங்களது புத்தகப் பட்டியலை மாநில அரசின் அங்கீகாரத்திற்கென அளிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது.

**I.** உயர்நீதிமன்றம் 10.6.2011 அன்று பிறப்பித்த மேற்படி இடைக்கால ஆணையை எதிர்த்து இந்த நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த நீதிமன்றம் 14.6.2011 அன்று அளித்த தீர்ப்பு மற்றும் ஆணையின்படி மேற்படி இடைக்கால ஆணையில் மாற்றம் செய்தது. அதன்படி ஒரு வல்லுநர் குழுவை அமைக்க மாநில அரசுக்கு ஆணையிடப்பட்டது. சமச்சீர் கல்வி முறை, பொதுப்பாடத்திட்டம், 2010 சட்டத்தின் கீழ் 2 முதல் 5ம் வகுப்பு வரையிலும், 7 முதல் 10ம் வகுப்பு வரையிலும் வழங்கப்படவுள்ள பாட புத்தகங்கள் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான வழிகளையும் முறைகளையும் ஆய்வு செய்ய அப்படியொரு வல்லுநர் குழுவை மாநில அரசு ஏற்கனவே நியமித்துள்ளது. திருத்தப்பட்ட சட்ட விதிகளை கருத்தில் கொண்டு 2 முதல் 5 வரை மற்றும் 7 முதல் 10 வரையிலான வகுப்புகளுக்கு இத்தகைய பாடநூல்களும், திருத்தப்பட்ட பாடத்திட்டமும் பொருந்துமா என்று முடிவு செய்யுமாறு உயர்நீதிமன்றத்தை இந்த நீதிமன்றம் கேட்டுக்கொண்டது.

**J.** மேற்படி ஆணைக்கிணங்க, ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. பல கூட்டங்களை நடத்திய பின் உயர்நீதிமன்றத்தில் ஒரு கூட்டறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையை பரிசீலித்த உயர் நீதிமன்றம் 18.07.2011 அன்று அளித்த தீர்ப்பு மற்றும் ஆணையில், வல்லுநர் குழு அறிக்கை தவறானது என்று கூறியது.திருத்தப்பட்ட 2011 சட்டத்தின் பிரிவு 3

செல்லாது என்று அறிவித்தது. ஆசிரியர்கள் வகுப்புகளைத் தொடங்க ஏதுவாக சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் அச்சிடப்பட்ட பாடபுத்தகங்களை மாநில அரசு விநியோகிக்க வேண்டும், 22.07.2011 அன்று அல்லது அதற்கு முன்னதாக பாடப்புத்தகங்கள் விநியோகத்தை நிறைவு செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. எனவே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**70. சுருக்கமாக எமது முடிவுகள் :**

(i) அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்களது பொருளாதார, சமூக அல்லது பண்பாட்டுப் பின்னணியின் காரணமாக எவ்வித பாகுபாடுமின்றி தரமான கல்வி கிடைக்கச் செய்வதற்காக சமச்சீர் கல்வி முறையை செயல்படுத்த தமிழக அரசால் 2010 சட்டம் நிறைவேற்றப்பட்டது.

(ii) படிப்படியாக என்றாலும் கூட, கல்வியாண்டுகள் தொடங்குவது குறித்து சட்டத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 2010–11 கல்வியாண்டிலிருந்து 1 மற்றும் 6ம் வகுப்புக்கும், 2011–12 கல்வியாண்டிலிருந்து இதர வகுப்புகளுக்கும் என கல்வியாண்டுகள் தொடங்குவதாக சட்டத்திலேயே கூறப்பட்டுள்ளது. ஆகவே சட்டத்தின் செயலாக்கம் என்பது எந்தவொரு அறிவிக்கையையும் சார்ந்திருக்கவில்லை.

(iii) சட்டம் செல்லத்தக்கதுதான் என்று பல்வேறு நபர்கள், நிறுவனங்கள், அமைப்புகள், மாணவர்களின் பெற்றோர் ஆகியோரால், எனினும் குறிப்பாக தனியார் பள்ளி நிறுவனங்களால் வழக்கு தொடரப்பட்டது. சட்டம் செல்லத்தக்கதுதான் என்று அங்கீகரித்து அந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. எனினும், சட்டத்தின் சில அம்சங்கள், குறிப்பாக 11, 12, 14 ஆகிய பிரிவுகளின் அம்சங்கள் உயர்நீதிமன்றத்தின் 30.04.2010 தேதிய தீர்ப்பு மற்றும் ஆணையால் நீக்கப்பட்டன. உயர்நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பு இந்த நீதிமன்றத்தின் 10.09.2010 அன்று பிறப்பித்த வாய்மொழி ஆணையால் அங்கீகரிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பில் உயர்நீதிமன்றம் சில ஆணைகளையும் பிறப்பித்தது. நிர்வாக ஆணைகள் பிறப்பிப்பதன் மூலம் அந்த ஆணைகளை நிறைவேற்ற முடியும். மேலும் 30.04.2010 தேதிய தீர்ப்பிலேயே கூறப்பட்டிருப்பது போல, அட்டவணையை மாற்றியமைப்பதன் மூலமாகக்கூட உயர்நீதிமன்றத்தின் ஆணைகளை நிறைவேற்ற முடியும்.

(iv) 2010 சட்டத்தின் சட்டப்பூர்வ விதிகளைச் செயல்படுத்துவதில் ஏதேனும் சிக்கல் ஏற்படுமானால் அதனை அரசு நிர்வாக ஆணை பிறப்பிப்பதன் மூலம் நீக்குவதற்கான அதிகாரத்தை 2010 சட்டத்தின் பிரிவு 18 வழங்குகிறது. 2010 சட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள எந்தவொரு சிக்கலையும் நிர்வாக ஆணை மூலம் செயல்படுத்துவதற்கான அதிகாரத்தை சட்டமே வழங்குகிறது.

(v) உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணைகளைச் செயல்படத்த முடியாது என்பதால் அவமதிப்பு வழக்குகளைத் தவிர்ப்பதற்காகவே 2011 சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது என்று நியாயப்படுத்தி மாநில அரசு முன்வைத்த வாதங்கள் முற்றிலும் தவறான கருத்தில் உருவானவையாகும், அவை ஏற்கதக்கவை அல்ல.

(vi) புதிய அரசு 16.05.2011 அன்று பதவியேற்றது. உடனடியாக 2011 மே 17, 18 தேதிகளில் பல்வேறு தனியார் பள்ளிகள்/ அமைப்புகளின் பிரதிநிதிகள் சமச்சீர் கல்வி முறையை ரத்துச் செய்யமாறு அரசிடம் கோரிக்கை வைத்தனர். அந்த கோரிக்கையில் பல ஏற்கனவே 2010 சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடுத்து நீதிமன்றங்களில் தோல்வியைச் சந்தித்த கழகங்கள்/ அமைப்புகளிடமிருந்து வந்தவை. எனவே அந்த மனுக்கள் பரிசீலனைக்கு ஏற்றவை அல்ல என்பதால் மாநில அரசு அவற்றை ஏற்றுக்கொண்டிருக்கக் கூடாது.

(vii) புதிய அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டம் 22.05.2011 அன்று கூடுவதற்கு முன்பாகவே அதாவது 21.05.2011ம் தேதியன்றே, பழைய கல்வி முறையின் கீழ் பாடப்புத்தகங்களை வெளியிடவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுவிட்டன. 2010 சட்டத்தை நீக்குவதென முன்கூட்டியே திட்டமிட்ட ஒரு அரசியல் முடிவு இருந்தது என்பதைத்தான் இது காட்டுகிறது. 22.05.2011 அன்று கூடிய அமைச்சரவை 2010 சட்டத்தை விலக்கிக்கொள்வதென முடிவு செய்தது. அதற்காக அவசரச் சட்டம் கொண்டுவந்தது.

(viii) அதுவரையில் பாடத்திட்டங்களையும் பாட நூல்களையும் ஆய்வு செய்வதற்கான எந்த நடவடிக்கையும் வல்லுநர் குழு மேற்கொள்ளாத நிலையில், 2010 சட்டத்தை செயல்படுத்துவதில்லை என்ற முடிவு எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது

என்பதற்கான ஆதாரம் எதுவும் மாநில அரசிடம் இல்லை.

(ix) இந்த முடிவை எதிர்த்து பெற்றோர்களும் ஆசிரியர்களும் வேறுபல அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தார்கள். உயர்நீதிமன்றம் இடைக்கால ஆணைகளைப் பிறப்பித்தது. இந்தக் கட்டத்தில்தான் 07.06.2011 அன்று சட்ட முன்வரைவு அவையில் கொண்டுவரப்பட்டது. சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக அமைச்சரவை முடிவெடுத்த நாளாகிய 22.05.2011 முதல் பின்தேதியிட்டு செயல்படுத்தப்பட்டது.

(x) உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணைகளை எதிர்த்து இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றை இந்த நீதிமன்றம் 14.06.2011 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணையின்படி தள்ளுபடி செய்தது; பொதுக்கல்வி முறையைச் செயல்படுத்துவதற்கான வழிகளையும் முறைகளையும் கண்டறிவதற்காக ஒரு வல்லுநர் குழு அமைத்தல் உள்ளிட்ட பல ஆணைகளை இந்த நீதிமன்றம் பிறப்பித்தது.

(xi) பள்ளிக் கல்வித்துறைச் செயலர் உயர்நீதிமன்றத்திலும், இந்த நீதிமன்றத்திலும் பிரமாணப்பத்திரங்கள் தாக்கல் செய்து, 2010 சட்டம் சட்டவிரோதமானது என்றும் ,அரசமைப்பு சாசனத்திற்கு எதிரானதென்றும் எனவே 2011 சட்டத்திருத்தம் தேவைப்படுகிறது என்றும் கூறினார். எனினும் வல்லுநர் குழுவில் பள்ளிக் கல்வித்துறைச் செயலரையும் ஒரு உறுப்பினராக இந்த நீதிமன்றம் முன்யோசனையின்றி நியமித்தது. 2010 சட்டம் அரசமைப்பு சாசனத்திற்கு எதிரானது, சட்ட விரோதமானது என்ற நிலைபாட்டை உயர்நீதிமன்றத்தின் முன் மேற்கொண்டவர் என்ற பின்னணியில் அவரை குழுவில் சேர்த்தது என்பது தேவையற்றதுதான்.

(xii) மாநில அரசின் சார்பில் வாதாடும் பொறுப்பு தரப்பட்டவரான தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறைச் செயலர், 09.05.2011 தேதியிட்ட அரசாணையின்படி 8, 9, 10ம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்களை அவரே அங்கீகரித்து விலைகளையும் முடிவுசெய்திருந்தார்.

(xiii) வல்லுநர் குழு உறுப்பினர்கள் பாடப்புத்தகங்களையும் பாடத் திட்டத்தையும் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கவில்லை. எனினும் சில குறைபாடுகளை சுட்டிக்காட்டி, அவற்றை சரிசெய்யவும், மேம்படுத்தவும் வேண்டுமெனக் கோரியிருந்தனர்.

(xiv) 2010 சட்டம் செல்லும் என்று உயர்நீதிமன்றமும் இந்த நீதிமன்றமும் தீர்ப்பளித்தன. ஆகவே அந்த தீர்ப்புகளின் பயன்களை குறிப்பாக 1ம் வகுப்பையும் 6ம் வகுப்பையும் பொறுத்த வரையில் 2011 சட்டத்திருத்தங்களின் மூலம் சட்டமன்றம் நிறுத்திவைப்பது அனுமதிக்கத் தக்கதல்ல. அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்களின் பட்டியல் வெளியிடப்பட்டு, சம்பந்தப்பட்ட அனைவரது கவனத்திற்கும் கொண்டுசெல்லப்பட்டுவிட்டது. இவ்வாறாக, இந்த வகுப்புகளை பொறுத்த வரையில் 2010 சட்டம் முற்றிலுமாக நடைமுறைக்கு வந்ததாகிறது.

(xv) 2011 சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் காரணங்கள் பற்றிய அறிக்கையில் ஒரு சிறந்த பள்ளிக் கல்விமுறையைக் கண்டறிவதே நோக்கமென தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக நோக்கம் என்பது 2010 சட்டத்தை நீக்குவதுதான் என்றாகிறது.

(xvi) சில குறிப்பிட்ட சூழல்களில், நீதிமன்றத்தால் சட்டப்பூர்வ விதிகள் தள்ளுபடி செய்யப்படும் நிலையில், அத்தகைய முடிவுக்குக் காரணமான நிலைமைகளை அடிப்படையாக மாற்றிடும் வகையில், சட்டம் செல்லத்தக்கதல்ல என்று சட்டம் நிறைவேற்ற சட்டமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. எனினும் இந்த வழக்கில் செய்தது போல சட்டப்பூர்வ ஏற்பாட்டில் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில், ஒரு சட்டம் செல்லத்தக்கதல்ல என்று சட்டமன்றத்தால் சட்டம் நிறைவேற்ற இயலாது.

(xvii) தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை 24.02.2011 அன்று, பொதுக்கல்வித்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பாடநூல்களை தயாரித்து வழங்க அழைப்பு விடுத்து, 05.04.2011 அன்று அதற்கு கல்வித் துறையும் ஒப்புதல் அளித்துவிட்டது. இதனை உயர்நீதிமன்றம் தனது 10.06.2011 தேதியிட்ட ஆணையில் குறிப்பிட்டுள்ளது. இந்தளவிற்கு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நேரத்தில், மாநில அரசு பழைய முறைக்குத் திரும்பிச்செல்வது அனுமதிக்கத்தக்கதல்ல.

(xviii) உயர்நீதிமன்றம் 30.04.2010 அன்று பிறப்பித்த பெரும்பாலான ஆணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2009 சட்டம் 29வது

பிரிவு கோருகிறபடி, கல்வி ஆணையராக ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் (DTERT) 27.07.2010 தேதிய அரசாணைப்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(xix) நெறிமுறைகள் தெரியப்படுத்தப்பட்டிருந்தன என்பதையும், தமிழ்நாடு பாடத்திட்டம் 2009 வெளியிடப்பட்டதன் மூலம் தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு(NCF) 2005 செயல்படுத்தப்பட்டது என்பதையும் எதிர்மனுதாரர்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன.

(xx) 2009 சட்டத்துடன் 2010 சட்டம் முரண்படுகிறது என்ற பிரச்சனை, பெரும்பாலான குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ள நிலையில் வெறும் கல்வியாளர் விவாதப்பிரச்சனையாகவே இருக்கிறது. மேலும் சில குறைபாடுகள் களையப்பட வேண்டியுள்ளது என்று வைத்துக்கொண்டாலும் கூட அதனை இப்போதும் கூடச் செய்யமுடியும். எனினும் இத்தகைய ஒரு சிறு பிரச்சனை 2010 சட்டத்தையே உறுதியற்ற வரையறுப்புகளோடு காலவரையின்றி நிறுத்திவைப்பதற்கான சரியான அடிப்படையாக இருக்க முடியாது.

(xxi) கடந்த காலத்திலும் கூட ஆட்சியில் இருந்த அரசியல் கட்சியின் தலைவர் பற்றிய சித்தரிப்புகள், அதாவது அவரைத் தனிப்பட்ட முறையில் பெருமைப்படுத்துகிற, சுய விளம்பரம் தேடுகிற அவரது சொந்த வழியையும், கோட்பாட்டையும் வளர்க்கிற அதன் மூலம் இளம் மாணவர்களிடையே அவரது அரசியல் மதிப்பை வளர்த்துவிட்டு, தாக்கம் செலுத்துகிற பாடக்குறிப்புகள், குறிப்பாக தொடக்க நிலை வகுப்புகளின் பாடபுத்தகங்களில் இடம்பெற்றதுண்டு என்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்ட ஆட்சேபணைக்குரிய விசயங்கள் இருக்குமானால் அவற்றை, 2010 சட்டத்தின் செயலாக்கத்தை காலவரையின்றி நிறுத்தி வைக்காமலே, நீக்க முடியும்.

(xxii)2011 ஏப்ரல் வாக்கில் 10ம் வகுப்பிற்கான பாடப் புத்தகங்கள் பள்ளிக் கல்வித்துறையின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டன. பல மாணவர்கள் அவற்றை பதிவிறக்கம் செய்து படிக்கத்தொடங்கிவிட்டனர். ஏனெனில் மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் 2 முதல் 5ஆம் வகுப்பு வரையிலும், 7முதல் 10ஆம் வகுப்பு வரையிலும் 2011–12ம் கல்வியாண்டிலிருந்து பொதுக்கல்வி முறை நிச்சயமாக செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் இருந்தனர். சம்பந்தப்பட்ட பலருடைய இத்தகைய ஆழ்ந்த நம்பிக்கைகள் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கப்படக் கூடாது. இவ்வளவு காலம் கடந்த நிலையில் 2010 சட்டத்தை திரும்பப்பெறுவதும், 1ஆம் வகுப்பு, 6ஆம் வகுப்பு புத்தகங்களைக்கூட விலக்கிக் கொள்வதும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அநீதியானது, நேர்மையற்றது, நியாயமற்றதாகும்.

(xxiii) உண்மையில் 2011 சட்டத்திருத்தமானது, வாரியத்திற்கு மாநில அரசு கட்டுப்படுத்தக்கூடிய ஆணைகளைப் பிறப்பிக்க முடியாது என்ற காரணத்தின் அடிப்படையில் உயர்நீதிமன்றத்தால் சற்றும் பொருத்தமற்றது என்று அறிவிக்கப்பட்ட 2010 சட்டத்தின் 14வது பிரிவை மீண்டும் கொண்டுவருகிற செயலேயாகும்.

(xxiv) ஒருசில பள்ளிகளால் தங்களது விருப்பப்படி பலவகைப் பாடபுத்தகங்களை செயல்படுத்த முடியாது என்று எடுத்துக்கொள்வதானாலும் கூட அது 2010 சட்டத்தை நீக்குவதற்கான அடிப்படையாக முடியாது. இந்தக் குறைபாட்டை நீக்குவதற்குத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(xxv)2011 சட்டம் நிறைவேற்றப்பட்டதானது உயர் நீதிமன்றம் மற்றும் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புகளை நிராகரிப்பதாகவே இருக்கிறது. சட்டத்தை சீர்குலைப்பதாகவே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

71. மேற்கூறிய காரணங்களால் இந்த மனுக்கள் எவ்வகையிலும் ஏற்கத்தக்கதாக இல்லை. இந்த வழக்கின் உண்மைகளும் சூழல்களும் இந்த நீதிமன்றம் தலையிடுவதற்கான எவ்வித சிறப்புக் காரணங்களும் இருப்பதாகக் காட்டவில்லை.

ஆகவே மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. மனுதாரர்கள் உயர்நீதிமன்றத் தீர்ப்பை இன்றிலிருந்து 10 நாட்களுக்குள் செயல்படுத்த வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது.

நீதிபதி **ஜே.எம்.பாஞ்சால்**
நீதிபதி **தீபக் வர்மா**
நீதிபதி **டாக்டர் பி.எஸ்.சவுஹான்**
ஆகஸ்ட் 09, 2011.

# சீராகவும் சமமாகவும்

## உச்ச நீதிமன்றம் தமிழக அரசினை உடனடியாக சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்தும்படி உத்தரவிட்டுள்ளது.

– எஸ். துரைராஜ்

**பழைய பாடத்திட்டமே தொடரும் என்ற அரசின் முடிவு குழப்பானதாகவும், மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது என நீதிமன்றம் கூறியது. மேலும் தமிழக அரசின் இந்த நடைமுறைகள் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மீதான பாகுபாடு, ஒடுக்குமுறை மற்றும் தன்னிச்சையான செயல்பாடுகளாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளது.**

“குழந்தைகள் எதிர்காலக் குடிமக்கள் மட்டுமல்ல அவர்கள் பூமியின் எதிர்காலமும் ஆவார்கள். குழந்தைகள் நலமாக இருப்பதற்கும் சிறப்பாக உருவாவதற்கும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் பொதுவாக மூத்தவர்கள், குறிப்பாக பெற்றோர்களும் ஆசிரியர்களுமே. இன்று நாம் குழந்தைகளை எப்படி நடத்துகிறோம் என்பதைப் பொறுத்தே நாளைய உலகம் வாழ்வதற்கு நல்ல இடமாக இருக்கும் அல்லது மோசமான இடமாக இருக்கும். எதிர்காலத்தில் சிறப்பாக இயங்குகிற ஒரு சமூதாயத்தை படைக்கக்கூடிய பொறுப்புள்ள பெரியவர்களை அறுவடை செய்வதற்காக இன்று தேசம் தனது குழந்தைகள் மீது செய்கிற ஒரு முதலீடுதான் கல்வி. ஆயினும் குழந்தைகள் எளிதில் பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடியவர்கள். அவர்களை மதிப்புடன் வைத்திருக்க வேண்டியுள்ளது, பேணி வளர்க்க வேண்டியுள்ளது, அக்கறையோடு பராமரிக்க வேண்டியுள்ளது, பாதுகாக்க வேண்டியுள்ளது” –ரோஹித் சிங்கால் மற்றும் இதரர்கள் எதிர் முதல்வர், ஜவஹர் என்.வித்யாலயா மற்றும் இதரர்கள் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு (டிசம்பர் 18, 2002)

தமிழ்நாடு சமச்சீர் கல்வி வழக்கில் கடந்த ஆகஸ்ட் 9 அன்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன்றம் மேலே குறிப்பிட்ட கருத்தை பொருத்தமான முறையில் நினைவுகூர்ந்தது. நீதிபதிகள் ஜே.எம்.பாஞ்சால், தீபக் வர்மா, பி.எஸ்.சவுஹான் ஆகிய மூன்று நீதிபதிகள் குழு சமச்சீர் கல்வியின் எதிர்காலம் குறித்த உறுதியற்ற நிலைமைகளுக்கு முடிவுகட்டியது. மாநில அரசு 10 நாட்களுக்குள் 10ம் வகுப்பு வரையிலான அனைத்து வகுப்புகளுக்கும் சமச்சீர் கல்வியை செயல்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டது.

தமிழ்நாடு சமச்சீர் கல்விச் சட்டம் – 2010 அஇஅதிமுக அரசால் நிறுத்தி வைக்கப்பட்ட செயல் “அரசமைப்பு சாசனத்திற்கும் அதன் 14வது சட்டப் பிரிவுக்கும் எதிரானது” என்று சென்னை உயர்நீதிமன்றம் ஜூலை 18 அன்று அளித்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் உயர்த்திப் பிடித்தது. மாநில வாரியம், ஆங்கிலோ இந்திய வாரியம், மெட்ரிகுலேசன் மற்றும் ஓரியன்டல் வாரியம் என்ற 4 வெவ்வேறு வகையான கல்வி முறைகளைச் சார்ந்த 1 கோடியே 23 லட்சம் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் ஆசிரியர்களும் 70 நாட்களாக அனுபவித்து வந்த சோதனையான நிலைமைக்கு இது முடிவு கட்டியது (ஃபிரன்ட் லைன், ஜூலை 1, 2011, ஆகஸ்ட் 12, 2011). சமச்சீர் கல்வித்திட்டம் கடந்த திமுக ஆட்சியின்போது கொண்டுவரப்பட்டதாகும்.
ஒரே சீரானக் கல்விச் சட்டம் “சட்ட விரோதமானது, அறிவுக்குப் பொருத்தமற்றது, அரசமைப்பு சாசனத்துடன் முரண்படுவது” என்ற அடிப்படையில் இத்திட்டத்தை நிறுத்தி வைப்பது என்ற தமிழக அரசின் முடிவைச் சுற்றிப் பின்னப்பட்ட பல புனைவுகளை உச்சநீதிமன்றத் தீர்ப்பு தகர்த்துள்ளது.

தமிழக அரசும் மெட்ரிக்குலேசன் பள்ளி நிர்வாகங்களின் சங்கங்களும் தாக்கல் செய்த மேல்முறையீடுகளைத் தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அங்கீகரித்து, அதற்கு 25 காரணங்களையும் குறிப்பிட்டது.

**தமிழ்நாடு சமச்சீர் கல்விச் சட்டம் - 2010 தமிழக அரசால் நிறுத்தி வைக்கப்பட்ட செயல் “அரசமைப்பு சாசனத்திற்கும் அதன் 14வது சட்டப் பிரிவுக்கும் எதிரானது” என்று சென்னை உயர்நீதிமன்றம் ஜூலை 18 அன்று அளித்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் உயர்த்திப் பிடித்தது.**

தீர்ப்பை எழுதிய நீதிபதி சவுஹான், “தேசத்தின் எதிர்காலம் அதன் இளைஞர்களையே சார்ந்திருக்கிறது” என்பதை மனதில் கொண்டு மாநில அரசு செயல்பட்டிருக்க வேண்டும் என்று கூறினார். “ஒரு குழந்தையின் தனித்தன்மைகள் அதன் தொடக்க கால வாழ்க்கையில் அடிப்படைக் கல்வி பெறுகிற

காலகட்டத்தில்தான் வளர்ச்சியடைகிறது. அவர்களது வாழ்க்கைப் பயணம் இவ்வளவு தூரத்திற்கு வலி மிகுந்த நிலைமைகளில் முடக்கப்படக்கூடாது. இளம் தலைமுறையினர் உலகச்சந்தையில் போட்டிபோட்டாக வேண்டும். கல்வி என்பது ஒரு நுகர்வோர் சேவையல்ல, கல்வி நிறுவனங்களை வர்த்தகக் கடைகள் போல் நடத்தக்கூடாது...'' என்று உச்சநீதிமன்றம் கூறியது.

சமச்சீர் கல்விச்சட்டத்தின் பிரிவு 3ல் உள்ள விதிகளை மாநில அரசு மாற்றியமைத்தது நியாயப்படுத்தக்கூடியதல்ல என்று உச்சநீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியது. சீரான பாடத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான காலவரம்பை அந்த 3வது பிரிவு விதிகள் வரையறுக்கின்றன. ''தமிழக அரசின் தலைமை வழக்குரைஞர் உயர்நீதிமன்றத்தில் 2010ம் ஆண்டுச் சட்டம் 2012–13 கல்வியாண்டில் செயல்படுத்தப்படும் என்று உறுதியளித்தது, 2011 (திருத்தம்) சட்டம் செல்லுபடியாகும் என்று கூறுவதற்கான சரியான காரணமாகாது'' என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

பழைய பாடத்திட்டத்திற்கே திரும்பிச்செல்வது என்று அரசு எடுத்த முடிவு தேவையற்ற குழப்பத்தையும் மன உளைச்சலையுமே ஏற்படுத்தும் என்று உச்சநீதிமன்றம் சுட்டிக் காட்டியது. அரசின் ஒட்டுமொத்த நடவடிக்கை தான்தோன்றித்தனமானது, மாணவர்களையும், ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் பாகுபடுத்துவது, ஒடுக்குவது என்று நீதிமன்றம் சித்தரித்தது.

''2011 ஏப்ரல் வாக்கில் 10ம் வகுப்பிற்கான பாடப் புத்தகங்கள் பள்ளிக் கல்வித்துறையின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டன. பல மாணவர்கள் அவற்றை பதிவிறக்கம் செய்து படிக்கத்தொடங்கிவிட்டனர். ஏனெனில் மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் 2 முதல் 5ஆம் வகுப்பு வரையிலும், 7முதல் 10ஆம் வகுப்பு வரையிலும் 2011–12ம் கல்வியாண்டிலிருந்து பொதுக்கல்வி முறை நிச்சயமாக செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் இருந்தனர். சம்பந்தப்பட்ட பலருடைய இத்தகைய ஆழ்ந்த நம்பிக்கைகள் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கப்படக் கூடாது. இவ்வளவு காலம் கடந்த நிலையில் 2010 சட்டத்தை திரும்பப்பெறுவதும், 1ஆம் வகுப்பு, 6ஆம் வகுப்பு புத்தகங்களைக்கூட விலக்கிக் கொள்வதும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அநீதியானது, நேர்மையற்றது, நியாயமற்றதாகும்'' என்று நீதிமன்றம் கூறியது.

### அரசாங்கத்தின் நோக்கம்

சமச்சீர் கல்விச் சட்டத்தில் திருத்தம் செய்ததில் அரசாங்கத்தின் உள்நோக்கம் குறித்தும் நீதிமன்றத் தீர்ப்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ''புதிய அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டம் 22.05.2011 அன்று கூடுவதற்கு முன்பாகவே அதாவது 21.05.2011ம் தேதியன்றே, பழைய கல்வி முறையின் கீழ் பாடப்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுவிட்டன. 2010 சட்டத்தை நீக்குவதென முன்கூட்டியே திட்டமிட்ட ஒரு அரசியல் முடிவு இருந்தது என்பதைத்தான் இது காட்டுகிறது'' என்று நீதிமன்றம் கேட்டுள்ளது.

''கடந்த காலத்திலும் கூட ஆட்சியில் இருந்த அரசியல் கட்சியின் தலைவர் பற்றிய சித்தரிப்புகள், அதாவது அவரைத் தனிப்பட்ட முறையில் பெருமைப்படுத்துகிற, சுய விளம்பரம் தேடுகிற அவரது சொந்த வழியையும், கோட்பாட்டையும் வளர்க்கிற அதன் மூலம் இளம் மாணவர்களிடையே அவரது அரசியல் மதிப்பை வளர்த்துவிட்டு, தாக்கம் செலுத்துகிற பாடக்குறிப்புகள், குறிப்பாக தொடக்க நிலை வகுப்புகளின் பாடபுத்தகங்களில் இடம்பெற்றதுண்டு என்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்ட ஆட்சேபணைக்குரிய விசயங்கள் இருக்குமானால் அவற்றை, 2010 சட்டத்தின் செயலாக்கத்தை காலவரையின்றி நிறுத்தி வைக்காமலேயே, நீக்க முடியும்'' என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தம் முற்றிலும் தேவையற்றது. ஏனெனில் உயர்நீதிமன்றத்தீர்ப்பின் படி இதிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு மாநில அரசுக்கு போதுமான அதிகாரங்கள் உள்ளன. சமச்சீர் கல்விச் சட்டத்தின் 18வது பிரிவில் அந்த அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. ''ஒரு ஊசியை வைத்துச் செய்திருக்கக் கூடிய செயலை, தேவையே இல்லாமல் முனைமழுங்கிய ஒரு வாளைச் சுழற்றிச் செய்ய அரசு முயன்றிருக்கிறது'' என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

அஇஅதிமுக அரசு மே 16 அன்று பதவியேற்ற உடனேயே பல்வேறு தனியார் பள்ளி நிர்வாகங்கள் சமச்சீர் கல்வித் திட்டத்தை நீக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்ததை நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது. ''புதிய அரசு 16.05.2011 அன்று பதவியேற்றது. உடனடியாக 2011 மே 17, 18 தேதிகளில் பல்வேறு தனியார் பள்ளிகள்/ அமைப்புகளின் பிரதிநிதிகள் சமச்சீர் கல்வி முறையை ரத்துச் செய்யமாறு அரசிடம் கோரிக்கை வைத்தனர். அந்த கோரிக்கையில் பல ஏற்கனவே 2010 சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடுத்து நீதிமன்றங்களில் தோல்வியைச் சந்தித்த கழகங்கள்/அமைப்புகளிடமிருந்து வந்தவை. எனவே அந்த மனுக்கள் பரிசீலனைக்கு ஏற்றவை அல்ல என்பதால் மாநில அரசு அவற்றை ஏற்றுக்கொண்டிருக்கக் கூடாது'' என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

கல்வியாண்டுகள் படிப்படியாக தொடங்குவது குறித்து சட்டத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ''அதாவது 2010–11 கல்வியாண்டிலிருந்து 1 மற்றும் 6ம் வகுப்புக்கும், 2011–12

கல்வியாண்டிலிருந்து இதர வகுப்புகளுக்கும் என கல்வியாண்டுகள் தொடங்குவதாக சட்டத்திலேயே கூறப்பட்டுள்ளது. ஆகவே சட்டத்தின் செயலாக்கம் என்பது எந்தவொரு அறிவிக்கையையும் சார்ந்திருக்கவில்லை'' என்ற நீதிபதிகள் கூறியுள்ளனர்.

**சாதி, குலம், சமூகம், மதம், பொருளாதார நிலைமைகள், சமூக அந்தஸ்துகள் ஆகிய பாகுபாடுகள் எதுவுமின்றி அனைத்துக் குழந்தைகளுக்கும் அரசு நிதி உதவி பெற்ற பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என்று கோத்தாரி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. ஆணையத்தின் பரிந்துரைகளை பின்னர் 1993ல் யஷ்பால் குழு ஏற்றுக்கொண்டு வலியுறுத்தியுள்ளது.**

''உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணைகளைச் செயல்படுத்த முடியாது என்பதால் அவமதிப்பு வழக்குகளைத் தவிர்ப்பதற்காகவே 2011 சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது என்று நியாயப்படுத்தி மாநில அரசு முன்வைத்த வாதங்கள் முற்றிலும் தவறான கருத்தில் உருவானவையாகும், அவை ஏற்கதக்கவை அல்ல''என்றும் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

பாடத்திட்டங்களையும் பாட நூல்களையும் ஆய்வு செய்வதற்கான எந்த நடவடிக்கையும் வல்லுநர் குழு மேற்கொள்ளாத நிலையில், 2010 சட்டத்தை செயல்படுத்துவதில்லை என்ற முடிவு எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான ஆதாரம் எதுவும் மாநில அரசிடம் இல்லை என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

சமச்சீர் கல்வி பாடத்திட்டங்கள் தொடர்பான பிரச்சனைகளை வல்லுநர் குழு ஆய்வு செய்த பின்னரும் கூட எந்த ஒரு குறிப்பிட்ட விசயத்திலும் உறுப்பினர்களிடையே ஒத்தக் கருத்து இல்லை. வெவ்வேறு பிரச்சனைகள்/பொருள்கள் குறித்து உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்துக்களையே தெரிவித்துள்ளனர். பாடப்புத்தகங்களையோ பாடத் திட்டங்களையோ உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கவில்லை. சில குறைபாடுகளை மட்டுமே சுட்டிக்காட்டி அவற்றைச் சரிபடுத்தி, திட்டத்தை மேம்படுத்த வேண்டும் என்றே அவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர் என்பதை நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சட்டத்திருத்தத்திற்கான நோக்கங்கள், காரணங்கள் குறித்த அறிக்கையை நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். ''2011 சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் காரணங்கள் பற்றிய அறிக்கையில் ஒரு சிறந்த பள்ளிக் கல்விமுறையைக் கண்டறிவதே நோக்கமென தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக நோக்கம் என்பது 2010 சட்டத்தை நீக்குவதுதான் என்றாகிறது'' என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

ஐயத்திற்கே இடமற்ற சொற்களில் உச்சநீதிமன்றம் பின்வருமாறு கூறியுள்ளது : ''2010 சட்டம் செல்லும் என்று உயர்நீதிமன்றமும் இந்த நீதிமன்றமும் தீர்ப்பளித்தன. ஆகவே அந்த தீர்ப்புகளின் பயன்களை குறிப்பாக 1ம் வகுப்பையும் 6ம் வகுப்பையும் பொறுத்த வரையில் 2011 சட்டத்திருத்தங்களின் மூலம் சட்டமன்றம் நிறுத்திவைப்பது அனுமதிக்கத் தக்கதல்ல. அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்களின் பட்டியல் வெளியிடப்பட்டு, சம்பந்தப்பட்ட அனைவரது கவனத்திற்கும் கொண்டுசெல்லப்பட்டுவிட்டது. இவ்வாறாக, இந்த வகுப்புகளை பொறுத்த வரையில் 2010 சட்டம் முற்றிலுமாக நடைமுறைக்கு வந்ததாகிறது.''

உச்சநீதிமன்றத்தில் 2010 செப்டம்பர் 10 அன்று அங்கீகரிக்கப்பட்ட, உயர்நீதிமன்றத்தின் 2010 ஏப்ரல் 30 தேதிய தீர்ப்பை இந்த சட்டத் திருத்தம் செல்லாததாக்குகிறது. இது, சமச்சீர் கல்வித்திட்டம் தொடங்குவது குறித்து அறிவிக்கிற தங்குதடையற்ற, வரைமுறைப்படுத்தப்படா அதிகாரம் அரசாங்கத்திற்கு தரப்பட்டிருப்பதால் 2010 சட்டத்தை தள்ளுபடி செய்வதாகவே இருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

''நேரடியாகச் செய்யமுடியாத ஒன்றை மறைமுகமாகச் செய்வதற்கு அனுமதி இல்லை என்பதே சட்டத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறையாகும். இதன் பொருள் என்னவெனில் எவையெல்லாம் செய்யத்தக்கவை அல்ல என்று சட்டத்தால் தடுக்கப்பட்டிருக்கிறதோ அதையெல்லாம் மறைமுகமான, சுற்று வழிகளில் செய்து சட்டப்படியானதாக ஆக்க முடியாது என்பதுதான்,'' என்று நீதிபதிகள் கருத்து கூறியுள்ளனர்.

சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்ட விதிகள் செல்லத்தக்கவையா என்று ஆய்வு செய்த உயர்நீதிமன்றம் கூறிய கருத்தை உச்சநீதிமன்றம் மேற்கோள் காட்டியுள்ளது. ''சட்டமன்ற பலத்தின் அடிப்படையில் சட்டத்திருத்தத்திற்கு எதிர்ப்பு எதுவுமில்லை என்பதால் அந்த அடிப்படையில் திருத்தத்தின் விளைவு குறித்தோ, அல்லது இத்தகைய அம்சங்களில் இந்த சட்டத்திருத்தம் வரவேற்கத்தக்க சட்டம்தானா என்றோ நாங்கள் ஆராய வேண்டியதில்லை,'' என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

### வர்த்தகமயமாக்கலுக்கு எதிராக

தமிழகத்தில் சமச்சீர் கல்விச்சட்டம் கொண்டவரப்பட்ட பின்னணி குறித்து ஆராய்ந்துள்ள உச்சநீதிமன்றம் சுதந்திர இந்தியாவில் கல்வியை

வர்த்தகத்தின்/வியாபாரத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை நினைவு கூர்ந்துள்ளது. 1951ல் மத்திய கல்வி ஆலோசனை வாரியம் பரிந்துரைத்தபடி நடுநிலைப்பள்ளி ஆணையம் அமைக்கப்பட்டது, அரசாங்கத்தின் ஆலோசனைப்படி அனைத்து மாணவர்களுக்கும் பாடபுத்தகங்கள் தயாரிக்கப்பட்டது, ஒரு பொதுப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது உள்ளிட்ட நடவடிக்கைகளை நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

தேசிய கல்விக்கொள்கை தொடர்பாக கோத்தாரி ஆணையம் (1964 –66) அளித்த அறிக்கையும் இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதி, குலம், சமூகம், மதம், பொருளாதார நிலைமைகள், சமூக அந்தஸ்துகள் ஆகிய பாகுபாடுகள் எதுவுமின்றி அனைத்துக் குழந்தைகளுக்கும் அரசு நிதி உதவி பெற்ற பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என்று கோத்தாரி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. ஆணையத்தின் பரிந்துரைகளை பின்னர் 1993ல் யஷ்பால் குழு ஏற்றுக்கொண்டு வலியுறுத்தியுள்ளது.

இந்தப் பின்னணியில்தான் தமிழக மக்களிடையே இருந்து அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரு பொதுவான கல்வி முறை வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது என்று உச்சநீதிமன்றம் கூறியது. தொடர்ச்சியான போராட்டம், பிரச்சார இயக்கம், பொதுமக்கள் நிர்பந்தம் ஆகிய காரணங்களால் தமிழக அரசு பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எஸ். முத்துக்குமரன் தலைமையில் ஓர் குழுவை 2006ல் நியமித்தது என்று நீதிமன்றம் கூறியுள்ளது. அந்தக் குழு 2007 ஜூலை 7ல் அளித்த தனது அறிக்கையில், மாநிலத்தில் தற்போதுள்ள 4விதமான கல்வி வாரியங்களை ஒழித்துவிட்டு ஒரு பொதுக் கல்வி முறையைக் கொண்டு வரவேண்டுமென்று பரிந்துரைத்தது.

கல்வி உரிமை பற்றி கருத்துதெரிவித்துள்ள உச்சநீதிமன்றம், ‘‘அரசமைப்பு சாசனத்தின் 14, 15 ஆகிய சட்டப்பிரிவுகளுக்கு ஒத்திசைவாகவே 21–ஏ சட்டப்பிரிவின் கீழ் கல்வி உரிமை என்பதும் இருக்க வேண்டும் என்று பிரச்சார இயக்கம் நடந்து வந்துள்ளது. தரமான கல்வி வழங்குவதில் பாகுபாடு இருக்கக்கூடாது என்றும் பிரச்சார இயக்கம் நடந்துவந்துள்ளது. ஆகவே ஒரு பொதுப்பாடத்திட்டமும் பொதுக்கல்வித்திட்டமும் தேவைப்படுகின்றன,’’ என்று கூறியுள்ளது.

குாந்தைகளின் கல்வி உரிமை என்பது இலவசமான, கட்டாயக் கல்வி என்பதோடு மட்டும் சுருங்கிவிடக்கூடாது. பொருளாதாரம் , சமூகம் அல்லது பண்பாட்டுப் பின்னணி அடிப்படையில் எவ்விதமான பாகுபாடும் இல்லாமல் தரமான கல்வி வழங்குவதாக விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று இந்த பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டவர்கள் ஒரு சீரான கல்விமுறை ஒரு பொதுப்பண்பாட்டிற்கு இட்டுச்செல்லும், ஏற்றத்தாழ்வுகளை நீக்கும், மனித உறவுகளில் பாகுபாடான மதிப்பீடுகளை ஒழித்துக்கட்டும் என்று நம்பினார்கள் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. மானுட மாண்புகளையும் வாழ்க்கைத்தரத்தையும் பொதுக்கல்வி முறை மேம்படுத்தும். சமத்துவ சமுதாயம் என்ற அரசமைப்பு சாசனத்தின் கோட்பாட்டை முன்னெடுத்துச் செல்லக்கூடிய சிந்தனைகளை உயர்த்தும் என்று அந்தத்தீர்ப்பு கூறுகிறது. உச்சநீதிமன்றம் தெரிவித்த தெள்ளத்தெளிவான செய்தியின் அடிப்படையில் தமிழக அரசு உடனடியாக சமச்சீர் கல்வியை செயல்படுத்தும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் அறிவித்தார். தீர்ப்புக்கு முதல் நாளே அவர், நீதிமன்றத்தின் ஆணைக்கு அரசு கட்டப்பட்டு நடக்கும் என்று அறிவித்திருந்தார்.

சமச்சீர் கல்வி பாடப்புத்தகங்களில் 41 திருத்தல்களும் நீக்கல்களும் செய்யப்பட்ட பிறகு அவை விநியோகிக்கப்படத் தொடங்கின. திமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) , இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாமக, மதிமுக உள்ளிட்ட பல அரசியல் கட்சிகள் இந்தத் தீர்ப்பை வரவேற்றன. இதனைச் செயல்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தமிழக அரசை வலியுறுத்தின.

சமச்சீர் கல்விக்காக மாணவர்கள் நடத்திய இடையறாத போராட்டத்திற்கு கிடைத்த வெற்றிதான் இந்தத் தீர்ப்பு என்று இந்திய மாணவர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.எஸ்.கனகராஜ்கூறினார். சமச்சீர் பாடப்புத்தகங்களை அனைத்து மாணவர்களுக்கும் வழங்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

**‘‘கல்வித்திட்டமும் பாடபுத்தகங்களும் செல்லுபடியாகக் கூடியவையே என்று உச்சநீதிமன்றம் தெளிந்த ஞானத்தோடு தீர்ப்பளித்திருக்கிறது. 3மாத காலத்திற்குள் புத்தகங்களில் செய்யவேண்டிய மாற்றங்கள் அல்லது நீக்கங்கள் குறித்து பள்ளிகளுக்கு அரசு தெரிவிக்க வேண்டுமென்றும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது,’’**

மூத்த கல்வியாளர் எஸ்.எஸ்.ராஜகோபாலன், "கல்வித்திட்டமும் பாடபுத்தகங்களும் செல்லுபடியாகக் கூடியவையே என்று உச்சநீதிமன்றம் தெளிந்த ஞானத்தோடு தீர்ப்பளித்திருக்கிறது. 3மாத காலத்திற்குள் புத்தகங்களில் செய்யவேண்டிய மாற்றங்கள் அல்லது நீக்கங்கள் குறித்து பள்ளிகளுக்கு அரசு தெரிவிக்க வேண்டுமென்றும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது," என்று கூறினார். பள்ளிக் கல்வி முறையில் உள்ள அசமத்துவத்திற்குக் காரணமான கூறுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். சமமான, தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்கான காலவரையறையோடு கூடிய செயல்திட்டம் தேவை என்றும் அவர் முன்வைத்தார். பொதுப்பள்ளிக்கான மாநில மேடை அமைப்பாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு இது ஒரு வரலாற்று வெற்றி என்றார். "சமூக நீதியை நோக்கி எடுத்துவைக்கப்படும் முதலடிதான் சமச்சீர்க் கல்வி என்றால், சமமான தரமான கல்வியை நிலைநாட்டுகிற திசையில் எடுத்துவைக்கப்படுகிற முதலடிதான் சீரான பள்ளிக் கல்விச் சட்டம்," என்று கூறினார். தனியார் பள்ளி நிர்வாகங்களில் ஒரு பகுதியினர், குறிப்பாக மெட்ரிக்குலேசன் பள்ளியை நடத்துவோர், இதை தாங்கள் எதிர்ப்பது போன்ற தோற்றத்தைத் தவிர்க்கின்றனர். அதே நேரத்தில் உறுதியாக இருப்பது போலவும் காட்டிக் கொண்டனர்.

சென்னையில் ஆகஸ்ட் 11 அன்று செய்தியாளர்களிடையே பேசிய தமிழ்நாடு நர்சரி, தொடக்க நிலை, மெட்ரிகுலேசன் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் சங்கத்தின் சில தலைவர்கள், சீரான கல்விச் சட்டத்தின் பாடத்திட்டத்தை செயல்படுத்திக்கொண்டே, மத்திய நடுநிலைக் கல்வி வாரிய வகுப்புகளைத் தொடங்க அனுமதிக்க வேண்டும் என்று தமிழக அரசிற்கு வேண்டுகோள் விடுத்தனர். மத்திய பள்ளிக் கல்வி வாரிய முறைக்கு மாற விரும்புகிற பள்ளிகள் அடுத்த ஆண்டிலேயே அதனைச் செயல்படுத்த இது வழிவகுக்கும் என்றும் அவர்கள் கூறினர்.

**– ஆதாரம்: ஃபிரன்ட்லைன், 9, செப்டம்பர் 2011.**

## எங்கே ?
- **2,777 அரசு உயர்நிலைப் பள்ளிகளில், 'லேப்' வசதி...**
- **10ம் வகுப்பிற்கு செய்முறைத் தேர்வு நடத்துவதில் சிக்கல்**

சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ், அனைத்துப் பள்ளிகளிலும் 10ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு, நடப்பு கல்வியாண்டு முதல் செய்முறைத் தேர்வு நடத்தப்பட உள்ளது. தனியார் பள்ளிகளில் ஏற்கனவே, 'லேப்' வசதிகள் இருக்கின்றன. ஆனால், 2,777 அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர்நிலைப்பள்ளிகளில், 'லேப்' வசதிகள் இல்லாததால், மாணவர்களுக்கு செய்முறைத் தேர்வு நடத்துவதில் சிக்கல் எழுந்துள்ளது. மெட்ரிக் மற்றும் ஆங்கிலோ இந்திய பள்ளி 10ம் வகுப்பு மாணவர்களுக்கு, பழைய கல்வித் திட்டத்தின் கீழ் செய்முறைத் தேர்வு நடைமுறையில் இருந்தது. தற்போது, சமச்சீர்கல்வித் திட்டம் அமலுக்கு வந்து விட்டதால், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 10ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் செய்முறைச் தேர்வு நடத்தப்பட உள்ளது. ஏற்கனவே, இரண்டு மாதம் பாடப்புத்தகங்கள் இல்லாத நிலையில், தற்போது தான் பள்ளிகளில் பாடம் நடத்தத் துவங்கியுள்ளனர்.

10ம் வகுப்பில் அறிவியல் பாடத்திற்கான 100 மதிப்பெண்களில், 75 மதிப்பெண்கள் எழுத்துத் தேர்வுக்கும் (தியரி), 25 மதிப்பெண்கள் செய்முறைத் தேர்வுக்கும் பிரிக்கப்பட்டுள்ளன. இதற்காக, முந்தைய அரசு அரசாணையும் வெளியிட்டுள்ளது. செய்முறைத் தேர்வு, ஜனவரி இறுதியில் அல்லது பிப்ரவரி முதல் வாரத்தில் நடைபெறும். இதற்கு இன்னும் நான்கு மாதங்களே உள்ளன. தனியார் பள்ளி மாணவர்களைப் பொறுத்தவரை எந்தவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில், அவர்களுக்கு ஏற்கனவே செய்முறைத் தேர்வு நடைமுறையில் இருந்ததால், தனியார் பள்ளிகளில் முழுமையான அளவில், "லேப்" வசதிகள் உள்ளன. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில், குறிப்பாக உயர்நிலைப்பள்ளிகளில் சிக்கல் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள, "லேப்"களும், பிளஸ் 2 மாணவர்களுக்கு ஏற்றாற்போல் அமைக்கப்பட்டுள்ளன. அந்த "லேப்" களை பயன்படுத்தி, 10ம் வகுப்பு மாணவர்கள் அறிவியல் செய்முறையை செய்ய முடியாது. எனவே, மேல் நிலைப்பள்ளிகளிலும், 10ம் வகுப்பு மாணவர்களுக்கென தனியாக, "லேப்" பள்ளிகளிலும், 10ம் வகுப்பு மாணவர்களுக்கென தனியாக, "லேப்" வசதிகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. தற்போதைய நிலவரப்படி, மாநிலத்தில் 4,557 உயர்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதில், தனியார் பள்ளிகள் 1,780. அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் 543. அரசு மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் 2,234. தனியார் பள்ளிகளை தவிர்த்து, மீதமுள்ள 2,777 உயர்நிலைப் பள்ளிகளில் முழுமையான அளவில், 'லேப்' வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இதே போல், 5,560 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இதில், தனியார் பள்ளிகள் 2,128. அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் 1,044; அரசு மற்றும் நகராட்சி மேல் நிலைப்பள்ளிகள் 2,388. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் 3,432 பள்ளிகளில், 10ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கென தனி "லேப்" வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**நிதி ?** அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் 2,777, மேல்நிலைப் பள்ளிகள் 3,432 என மொத்தம் 6,209 பள்ளிகளில் புதிதாக, 'லேப்' வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கு பல லட்ச ரூபாய் தேவை. இதற்காக இதுவரை நிதி ஒதுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. பொதுத் தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், பள்ளிக் கல்வித்துறை விரைந்து செயல்பட வேண்டிய நெருக்கடி எழுந்துள்ளது.

**கருவிகள் ?** மத்திய இடைநிலைக் கல்வி திட்டத்தின் கீழ், சில ஆய்வக கருவிகளை ஒவ்வொரு பள்ளிகளும் ஏற்கனவே வழங்கினர். ஆனால், அவற்றை வழங்கி நீண்ட காலமாகிறது. அவை தற்போது பயன்படுத்தக் கூடிய நிலையில் இருக்கிறதா என்று கூற முடியாது. முதலில், செய்முறைத் தேர்வுக்குரிய பாடப் பகுதிகளை அறிவித்து, அதற்கேற்ப ஆய்வக கருவிகளை வழங்கி, முழுமையான அளவில், 'லேப்' அமைக்க வேண்டும்.

**– தினமலர், 4.09.2011**

# மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 : மக்களையும் பெண் குழந்தையையும் நிர்வகித்தல்

– மேரி இ.ஜான்

**மிகவும் எதிர்பார்க்கப்பட்ட தற்காலிக மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 முடிவுகள் குறைந்து வரும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையானது (0-6 வருடங்கள்) ஒவ்வொரு ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 922 முதல் 914 ஆக பெண் குழந்தைகள் மேலும் குறைந்துள்ளது சுட்டி காட்டியுள்ளனர் மேற்கு மற்றும் மத்திய இந்தியாவில் பெண் குழந்தை வெறுப்பானது தொடர்ந்து அதிகமாகி வருவதால் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.**

**இந்த சமமற்ற போக்கை சரி செய்வதற்கான கண்காணிப்பு பணிகள் மூலம் நிலவி வரும் பரந்துபட்ட கலாச்சார சூழல்களில் பெண் குழந்தைகள் உயர் வாழ்வதை எவ்வாறு உறுதி செய்வது என்பது நமது முன்னால் உள்ள கேள்வியாகும்.**

மக்கள் தொகை கணக்கெடுப்பு, அதன் செயல்பாடு ஆகியவற்றுடன் இந்தியாவுக்கு உள்ள தொடர்பின் முக்கியமான ஒரு கட்டத்தில் 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு உத்தேச அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 'ஆக்கபூர்வமான' அம்சங்கள் என பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளாகவே தரப்பட்டிருந்த விஷயங்கள் இந்தியா எதற்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்கிறது என்பதைக் காட்டுவதாக இருந்தன. மக்கள் தொகை அதிகரிப்பு விகிதம் சரிவு (எதிர்பார்க்கப்பட்ட அளவை விட குறைவான விகிதத்திலேயே குறைந்துள்ளது), எழுத்தறிவு பெற்றோர் விகிதம் அதிகரிப்பு, ஆயிரம் ஆண்களுக்கு எத்தனை பெண்கள் என்பதில் ஒட்டுமொத்தமாக ஏற்பட்டுள்ள வளர்ச்சி என்பதாகவே அந்த விவரங்கள் தரப்பட்டிருந்தன. பாலில் விழுந்த ஈ போல் உறுத்திய ஒரே விஷயம், குழந்தைகளிடையேயான (0 – 6 வயது வரையிலான குழந்தைகள்) பாலின விகிதம் குறைந்திருப்பதுதான். 2001ம் ஆண்டு கணக்கெடுப்பில் ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 927 பெண் குழந்தைகள் என இருந்த விகிதம், 2011ல் இதுவரை இல்லாத அளவிற்கு குறைவாக 914 என வீழ்ச்சியடைந்தது. அன்று மாலை தொலைக்காட்சி செய்தி ஒளிபரப்புக்கு பேட்டியளித்த மத்திய உள்துறை அமைச்சகச் செயலர், பெண் குழந்தைகளின் விகிதாச்சார பிரச்சனையைப் பற்றிக் கூறுகையில், அரசு தனது கொள்கைகளை மறு பரிசீலனை செய்தாக வேண்டும் என்றார்.

பாலின விகிதாச்சாரம், பெண் குழந்தைகளின் எண்ணிக்கை என்ற இந்தப் பிரச்சனையை நாம் எவ்வாறு அணுகுவது? 2011க்கான மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதி வாரியான கணக்கெடுப்பை சேர்க்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டபோது, அது எந்த அளவிற்கு சர்ச்சையைக் கிளப்பியது என்பது நினைவுகூரத்தக்கது. சாதிவாரியான கணக்கெடுப்பு மேற்கொள்வது மக்கள் தொகை கணக்கெடுப்பின் 'நம்பகத்தன்மையில்' குறுக்கிடுவதாகிவிடும் என்பதே அரசாங்கத்தரப்பின் அதிகாரப்பூர்வக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்த ஆட்சேபனையாகும். சாதிவாரி கணக்கெடுப்பு மேற்கொள்வது அரசியல் ரீதியானது, அத்துடன் மிகவும் சிக்கலானது எனக் கூறி பல அறிஞர்களும் அதற்கெதிராக கருத்துக்கூறியிருக்கிறார்கள். ஆனால் சாதிப் பெயரைச் சேர்ப்பதால் மக்கள் எண்ணிக்கையின் "நம்பகத்தன்மை" எவ்வாறு பாதிக்கப்படும் என்று எவரும் விளக்கவில்லை. அது ஒருபுறமிருக்க, பெண் குழந்தைகள், ஆண்குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவது என்பதும் அரசியல் ரீதியானதானதுதானா, அதுவும் சிக்கலானதுதானா என்பது குறித்தும் யாரும் விளக்கவில்லை.

பெண்களின் எண்ணிக்கை நியாயமற்ற முறையில் வீழ்ச்சியடைய அனுமதிக்காமலே, மக்கள் தொகையை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது. அவ்வகையில் பாலினம் என்பது இயற்கையானது, இன்றியமையாதது. பாலினப் பாகுபாடு தொடர்பான கருத்துகள் கூட, மக்கள் தொகை நிர்வாகத்தில் பெண்கள் தங்களது கருவுறுதல்

**Table.1: Child Sex Ratios (0-6 Years) Census 1991, 2001, 2011, Select States**

| STATE | (FEMALES PER 1,000 MALES) | | | | |
|---|---|---|---|---|---|
| | 1991 | 2001 | Difference 2001-1991 | 2011 | Difference 2011-2001 |
| India | 945 | 927 | - 18 | 914 | -13 |
| *North West* | | | | | |
| Himachal Pradesh | 951 | 896 | -55 | 906 | +10 |
| Punjab | 875 | 798 | -77 | 846 | +48 |
| Haryana | 879 | 819 | -40 | 830 | +11 |
| Chandigarh | 899 | 845 | -46 | 867 | +22 |
| Delhi | 915 | 868 | -47 | 866 | -2 |
| *North Central* | | | | | |
| Uttar Pradesh | 928 | 916 | -12 | 899 | -17 |
| Madhya Pradesh | 952 | 932 | -20 | 912 | -20 |
| *West* | | | | | |
| Gujarat | 928 | 883 | -45 | 886 | +3 |
| Rajasthan | 916 | 909 | -7 | 883 | -16 |
| Maharashtra | 946 | 913 | -33 | 883 | -30 |
| Goa | 964 | 938 | -26 | 920 | -18 |
| *East* | | | | | |
| Bihar | 959 | 942 | -17 | 933 | -9 |
| Jharkhand | NA | 965 | | 943 | -22 |
| West Bengal | 967 | 960 | -7 | 950 | -10 |
| Nagaland | 993 | 964 | -29 | 944 | -20 |
| Orissa | 967 | 953 | -14 | 934 | -19 |
| *South* | | | | | |
| Andhra Pradesh | 975 | 961 | -14 | 943 | -18 |
| Karnataka | 960 | 946 | -14 | 943 | -3 |
| Tamil Nadu | 948 | 942 | -6 | 946 | +4 |
| Kerala | 958 | 960 | +2 | 959 | -1 |

***Source: Compiled from Census of 2001 and Census of 2011***

தன்மைகளின் மூலம் எந்த அளவுக்குப் பங்களிக்கிறார்கள் என்பதான பெரிய அக்கறைகளுக்குள் அடிபட்டுப் போகின்றன. எழுத்தறிவு பெற்றவர்கள் பற்றிய தகவல் சேர்க்கப்பட்டிருப்பது, பெண் குழந்தைகள் மற்றும் வளர்ந்த பெண்களிடையே எழுத்தறிவு அதிகரித்திருப்பது என்பன போன்ற “ஆக்கப்பூர்வ” புள்ளி விவரங்கள் பிறப்பு எண்ணிக்கையைக் குறைவாக வைத்திருக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றன. பாலின விகிதாச்சாரம் குறித்த பிரச்சனை எந்த அளவிற்கு மேலோட்டமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதை இக்கட்டுரையில் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆனால் இதுவரை நடந்தது என்ன? 2011 கணக்கெடுப்பில் நமக்குக் கிடைக்கிற படிப்பினை என்ன? (அட்டவணை – 1)

**1991 முதல் குழந்தைகளின் பாலின விகிதங்கள்**

இந்தியாவின் குழந்தை பாலின விகித முறைகள் எவ்வாறு இருந்து வந்துள்ளன என்பதை மேற்படி அட்டவணை காட்டுகிறது. இதில் முந்தைய புள்ளி விவரங்களும், தற்போதைய உத்தேச அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களும் தரப்பட்டுள்ளன. அடுத்தடுத்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட மாறுபாடுகள் என்ன என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாடு வடமேற்கு, வட மையம், மேற்கு, கிழக்கு, தெற்கு என பிரிக்கப்பட்டு கடந்த 20 ஆண்டுகளில் இருந்த நிலவரம் குறித்த ஒரு மொத்தமான கண்ணோட்டம் தரப்பட்டுள்ளது. (தற்போதைய நவீன தாராளமய காலகட்டத்தில் இது நிகழ்கிறது என்பதை மட்டுமல்லாமல், ஒரு தலைமுறை கடந்து நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்). தேசிய அளவில் 2001ல் 18 புள்ளிகள் குறைந்திருந்தது இப்போது மேலும் 13 புள்ளிகள் குறைந்திருக்கிறது. குறைவான எண்ணிக்கையில் குழந்தைகள் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. (கருவுறுதல் விகிதாச்சாரம் குறைந்திருப்பதன் மூலம் இது காட்டப்படுகிறது). எனவே அந்தக் குடும்பங்களில் ஆண்–பெண் விகிதாச்சாரம் எவ்வாறு இருக்கிறது என்பது முக்கியத்துவம் பெறுகிறது. சுருக்கமாகச் சொல்வதென்றால், 0–6 வயதுப் பிரிவில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு இட்டுச்சென்றுள்ள நடைமுறைகள் கடந்த பத்தாண்டு காலத்தில் நாடு முழுவதுமான விரிவான ஒட்டுமொத்த விகிதாச்சாரத்தோடு ஒப்பிடுகையில் குறைவாகவே பரவியிருக்கின்றன. எனினும் அந்த வட்டம் விரிவடைந்துகொண்டே இருக்கிறது.

10 ஆண்டுகளுக்கு முன்னால் 2001 – மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஏன் இத்தகைய பரபரப்பான செய்தியாக இருந்தது என்பதை நினைத்துப் பார்ப்பதற்காகவே 1991ம் ஆண்டின் புள்ளி விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில்தான் ஒட்டுமொத்த பாலின விகிதாச்சாரத்தை விட குழந்தைகளிடையேயான பாலின விகிதாச்சாரம் முதல்முறையாக சரிவடைந்தது. 1991ல் ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 945 பெண் குழந்தைகள் இருந்தனர்; இது 2001ல் 927 பெண் குழந்தைகளாகக் குறைந்தது. அதே நேரத்தில் ஒட்டுமொத்த பாலின விகிதாச்சாரமானது 1,000 ஆண்களுக்கு 927 பெண்கள் என இருந்தது. இதே காலகட்டத்தில் 933 என அதிகரித்தது. (பெண்களிடையே ஆயுள்காலம் அதிகரித்திருக்கிறது என்பதற்கு இது ஒரு தெளிவான அறிகுறிதான். 2001ம் ஆண்டில்தான் வடமேற்கு இந்தியாவில் பல மாநிலங்கள் தங்களது குழந்தை பாலின விகிதங்கள் சரிவடைந்ததைக் கண்டன. அதில் பஞ்சாப் முதலிடம் பிடித்தது. அந்த மாநிலத்தின் குழந்தை பாலின விகிதம், 800க்கும் கீழ் வீழ்ச்சி அடைந்தது. இமாச்சலப்–பிரதேசம் உள்ளிட்ட வேறு மாநிலங்கள் முதல்முறையாக பெரும் சரிவைக் கண்டன. இரண்டாவதாக (உலக அளவில் கடைப் பிடிக்கப்படும் பொதுவான நடைமுறையின்படி) குழந்தை பாலின விகிதம் 950க்கும் கீழே சரிவடைந்துவிட்டது என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்ததால் (குறிப்பாக மாவட்ட அளவில்) 2001ம் ஆண்டின் கணக்கெடுப்பு வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. வடமேற்கு மாநிலங்களுக்கு அப்பால் கோவா, நகர்ப்புற ஒரிசா, வடகிழக்கின் சில பகுதிகள் ஆகியவற்றிலும் இதே நிலைமைதான். வடமேற்கு மாநிலங்களில் பிறப்பிலேயே பாலினம் அறிந்து தேர்ந்தெடுக்கும் நடைமுறை தீவிரப்பட்டு வந்ததை இது காட்டுகிறது. ஏற்கெனவே பெண் சிசுக்கொலையும், பெண் குழந்தைகள் மரணமும் அதிக அளவிற்கு நடைமுறையில் இருந்த பகுதிகள் அல்லாமல், மற்ற பகுதிகளுக்கும் அது பரவியதை அந்தப் புள்ளி விவரங்கள் காட்டின. மற்ற பகுதிகளிலும் சிறிய எண்ணிக்கையிலான குடும்பங்கள் முதல்முறையாக இந்தப் பழக்கத்தை ஆரம்பித்ததையும் அந்தப் புள்ளி விவரம் வெளிப்படுத்தியது.

**வடமேற்கும் இந்தியாவின் இதர பகுதிகளும்**

2011ம் ஆண்டின் கணக்கெடுப்பு மாநில வாரியான விவரங்கள் வடமேற்கு மாநிலங்களுக்கும் இந்தியாவின் இதர பகுதிகளுக்குமிடையே ஒரு தெளிவான வேறுபாடு இருப்பதைக் காட்டுகிறது. குஜராத், ஹரியானா, தில்லி, இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் குழந்தைகளின் பாலினம் அறிந்து தேர்வு செய்கிற (அதாவது ஆண் குழந்தைகளைத் தேர்வு செய்கிற நடைமுறை) உச்சத்தை அடைந்திருக்கிறது. சண்டிகார், பஞ்சாப் போன்ற பகுதிகளில் சிறிதளவு முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கிறது. (வடமேற்கு மாநிலங்கள் 1991ம் ஆண்டின் நிலவரத்திற்கு, அதாவது 950க்கும் குறைவு

என்ற அளவிற்கு திரும்பி வந்திருக்கின்றன என்றபோதிலும், அந்த மாநிலங்களில் மேற்கொண்டு சரிவு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது). ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 798 என்ற நிலையிலிருந்த பஞ்சாப் 846 பெண்குழந்தைகள் (48 புள்ளிகள்) என்ற நிலையை அடைந்திருக்கிறது. அதன் மூலம் அது தனது அண்டை மாநிலங்களுக்கு நிகராக மாறியுள்ளது. எனினும் மாவட்ட வாரியான விவரங்கள் வருகிறபோதுதான் எந்த அளவிற்கு உண்மையான மாற்றங்கள் நடந்திருக்கின்றன என்பது தெரியவரும். தில்லி, குஜராத் போன்ற மாநிலங்களில் 10ஆண்டுகளுக்கு முன் இருந்த அதே விகிதத்திலேயே குடும்பங்கள் பாலின அடிப்படையான குழந்தைத் தேர்வில் ஈடுபட்டுள்ளன. (1996 – 2001 காலகட்டத்திலும் 2006 – 2011 காலகட்டத்திலும் எத்தனை பெண் குழந்தைகள் பிறந்தன, எத்தனை பெண் குழந்தைகள் உயிரோடு இருந்தன என்ற ஒப்பீடு இதில் இருக்கிறது). இவ்வாறாக பஞ்சாப் மாநிலத்தில் இந்த நடைமுறையின் கடுமை ஓரளவு குறைந்திருக்கிறது. ஹரியானா மாநிலத்தில் மாவட்ட வாரியான புள்ளி விவரங்களை ஒரு பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது. அதன்படி குருச்சேத்திரா மாவட்டத்தில் 2001ம் ஆண்டில் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 771 பெண் குழந்தைகள் இருந்தன. தற்போது 817 பெண் குழந்தைகள் உள்ளன. இது பஞ்சாப் நிலவரத்தைப் போன்றதே ஆகும். எனினும், ஜஜ்ஜார், மகேந்திரகார், ரிவாரி, திவானி, பரிதாபாத் போன்ற பல மாவட்டங்களில் 2001ல் இருந்ததைவிட மோசமான பாலின விகிதமே உள்ளது.

வடமேற்கு இந்தியாவில் எப்படிப்பட்ட "முன்னேற்றங்கள்" (அப்படிச் சொல்லலாம் என்றால்) ஏற்பட்டிருந்தாலும், மேற்கு மாநிலங்கள், மத்திய மாநிலங்கள், கிழக்கு மாநிலங்களின் பெரும்பகுதிகளில் குழந்தை பாலின விகிதம் சரிவடைந்திருக்கிறது. மகாராஷ்டிரா, கோவா, ராஜஸ்தான், மத்தியபிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகியவற்றில் இதுதான் நிலைமை. இந்தப் பட்டியலில் இப்போது தென் மாநிலங்களிலிருந்து ஆந்திராவும் சேர்ந்துகொண்டுள்ளது. (தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சேலம், தருமபுரி போன்ற மாவட்டங்களில் பெண் சிசுக்கொலையும், பாலின அடிப்படையில் குழந்தைத் தேர்வும் ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவந்திருப்பது நாடறிந்த ஒன்று. எனவே, தற்போது அந்த மாநிலத்தின் நிலவரம் என்ன என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்). வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பாலின அடிப்படையில் குழந்தைகளை தேர்வு செய்கிற பழக்கம் விரிவடைந்து வருவதையே மாநில அளவிலான இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. பரபரப்பு ஊட்டக்கூடிய அளவிற்கு இந்தப் புள்ளி விவரங்கள் இல்லையென்றாலும், வளமான வட்டாரங்கள் என்று சொல்லப்படுகிற வடமேற்கு மாநிலங்களிலிருந்து ஏழை மாநிலங்கள் வரையில் இதுதான் நிலைமை. உதாராணமாக உத்தரப்பிரதேசம் தொடர்பாக அண்மையில் வெளிவந்துள்ள ஒரு செய்தி, முன்பு பாலின அடிப்படையில் குழந்தைகள் தேர்வு செய்யப்படுவது என்பது நடைமுறையிலேயே இல்லாத கிழக்கு நகரங்களிலும் மாவட்டங்களிலும் தற்போது இந்தப் பழக்கம் பரவியிருப்பதை வெளிப்படுத்துகிறது. (இவற்றில் மிகவும் வித்தியாசமான புள்ளி விவரம் அமைந்துள்ள ஒரே மாநிலம் ஜம்மு–காஷ்மீர்தான். அந்த விவரங்களின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகமும் எழுகிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு 1991, 2001, 2011 ஆகிய ஆண்டுகளில்தான் அங்கு மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் இந்த மாநிலத்தின் குழந்தை பாலின விகிதம் 941 என்பதிலிருந்து 859ஆக (82 புள்ளிகள்) சரிவடைந்திருக்கிறது. நாட்டிலேயே இந்தக் காலகட்டத்தில் கருவுறுதலைப் பொறுத்தவரையில் ஒரு ஆக்கப்பூர்வமான முன்னேற்றம் என்பது ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில்தான் நிகழ்ந்திருக்கிறது. தற்போதைய சர்ச்சை எந்த வடிவம் எடுத்தாலும் இத்தகைய புள்ளி விவரங்கள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. மேலும் இது குறித்து தொடர்ச்சியாக ஆராய வேண்டியுள்ளது.

வடமேற்கு மாநிலங்களில் "முன்னேற்றங்கள்" ஏற்பட்டிருப்பதற்கு ஒரு காரணம், கருவில் பாலினம் அறியும் சோதனைகள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதாகும். மற்ற பகுதிகளில் இந்த சோதனை பரவியிருக்கிறது என்றாலும், இந்தப் பகுதிகளில் இந்தச் சோதனைகள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன. எனினும், இரண்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பது தவறாகிவிடக்கூடும். ஏனெனில் தற்போதுள்ள புள்ளிவிவரம் சிக்கலானதாக இருக்கிறது. (பெரும் வறுமை மட்டத்தோடு தொடர்பில்லாத மாநிலமாகிய கோவா முதல் ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் போன்ற ஏழை மாநிலங்கள் வரையில்) பரவலான மாநிலங்களில் குழந்தை பாலின விகிதம் இந்த அளவிற்கு சரிவடைந்திருக்கிறது என்பதும், 2011ல் 30 புள்ளிகள் என்கிற அளவிற்குப் பெரும் சரிவைச் சந்தித்துள்ள மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலும் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பது, இன்னும் நுட்பமான புள்ளி விவரங்கள் தேவை என்பதையே வலியுறுத்துகின்றன. அத்தகைய ஒரு புரிதலுக்கு நாம் காத்திருக்கத்தான் வேண்டும்.

முந்தைய பத்தாண்டு காலத்தில் சில ஆராய்ச்சியாளர்கள் கொண்ட குழு 2003–05 காலகட்டத்தில், வடமேற்கு

இந்தியாவின் மிகக் குறைந்த குழந்தைப் பாலின விகிதம் கொண்ட 5 மாவட்டங்களில் ஒரு ஆய்வை மேற்கொண்டது. அதில், இந்தப் பகுதிகளின் குழந்தை பாலின விகிதம் கடுமையான அளவிற்குச் சரிவடைந்துள்ள பின்னணியில், வட்டாரம் சார்ந்த கருதுகோள்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருந்ததை அந்த ஆய்வு சுட்டிக்காட்டியது. உதாரணமாக, பஞ்சாப் மாநிலத்தின் பதேகர் சாஹிப் மாவட்டத்தில் ஒரே ஒரு ஆண்குழந்தை மட்டுமே உள்ள குடும்பங்கள் (குறிப்பாக ஜாட் சீக்கியர்கள் மற்றும் நகர்ப்புற மேல்சாதிக் குடும்பங்கள்) இருந்ததை அந்த ஆய்வு வெளிப்படுத்தியது. கங்கிரா, ரோட்டெக் மாவட்டங்களில் இரண்டு குழந்தைகள் உள்ள குடும்பங்கள் இருந்தன. (அவற்றிலும் பெண் குழந்தைகள் உள்ள குடும்பங்கள் மிகக் குறைவு). தோல்பூர், மொரினா போன்ற மாவட்டங்களில் பெரிய குடும்பங்களில் கூட பெண் குழந்தைகளின் மரணம் மிகுந்த அளவிற்கு பதிவாகியுள்ளது. பாலின அடிப்படையில் குழந்தைகளைத் தேர்வு செய்கிற நடைமுறையோடு இணைந்ததாகவே பெண் குழந்தைகளின் மரணப் பிரச்சனையும் இருந்தது.

## இதுவரையிலான விவாதம்

பாதகமான பாலின விகிதாச்சாரம் குறித்து இன்னும் கூர்மையாகப் புரிந்துகொள்ள, நாம் 1980ஆம் ஆண்டுகளில் பாலின அடிப்படையில் குழந்தைகளைத் தேர்வு செய்வதற்கான 'அம்னியோசென்டிசிஸ்' என்ற மருத்துவ சோதனை முறைக்கு மாதர் அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்த நிகழ்வுகளைத் திரும்பிப் பார்க்கலாம். மகாராஷ்டிரா, தில்லி, பஞ்சாப் ஆகிய மாநிலங்களைச் சார்ந்த மகளிர் அமைப்புகள் அந்தச் சோதனைக்கு எதிராக பிரச்சார இயக்கம் நடத்தின. தொடக்கத்தில் அதற்குப் பெரிய அளவில் மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை. சொல்லப் போனால் பிரச்சனை என்ன என்பதேகூட பலருக்குத் தெரியவில்லை. இன்று நிலைமை மாறியிருக்கக்கூடும். ஏனெனில் பாலின பாகுபாட்டிற்கான ஒரு அடையாளமாகவே இன்று பாலின விகிதம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஒரு சிலராவது இன்றைக்கு இந்தப் பிரச்சனையில் அக்கறை காட்டுகிறார்கள். ஆக, இதிலிருந்தே எந்த அளவிற்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு அமைப்புகள் (வட்டார இயக்கங்கள், அரசு அமைப்புகள், மதம் சார்ந்த அமைப்புகள், உலக அமைப்புகள் போன்றவை) இந்தப் பிரச்சனையில் முனைப்புடன் செயல்பட்டிருக்கின்றன என்பதை புரிந்துகொள்ள முடியும். இந்த அமைப்புகள் இப்புள்ளி விவரங்களை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றன. ஒரு சுய விமர்சனத்தோடும் கூறவேண்டுமானால், குழந்தைகளின் பாலின விகிதம் என்பது ஒருவிதமான கல்வி ஆராய்ச்சி தொடர்பான விஷயமாகவும், பிரச்சார விஷயமாகவும் மாறியிருக்கிறது எனலாம்.

ஆகவே 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பல்வேறு கோணங்களில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. சில ஆராய்ச்சியாளர்கள் இந்தப் புள்ளி விவரங்கள் ஏற்கெனவே தேசிய குடும்ப நல ஆய்வுகள் என்.எப்.எச்.எஸ். (இதற்கான மூன்றாவது ஆய்வு 2005 – 06ல் மேற்கொள்ளப்பட்டது), பிறப்பு பதிவு மாதிரி ஆய்வு (எஸ்.ஆர்.பி.எஸ்.) போன்ற ஆய்வுகளிலிருந்து கிடைத்த புள்ளி விவரங்களைப் போலவே இருக்கும் என்று யூகித்தார்கள். அதே நேரத்தில் அந்த ஆய்வுகளுக்கும், இந்தக் கணக்கெடுப்பிற்குமிடையே சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன. 1994ம் ஆண்டின் கரு சோதனை தொழில்நுட்ப சட்டம் குறித்து அளவுக்கு மீறி கவனம் செலுத்தப்பட்டதா அல்லது கொஞ்சம்கூட கவனம் செலுத்தப்படவில்லையா? அதேபோல் கணக்கெடுப்பு எண்ணிக்கைகள் குழப்பமாக இருந்தாலும்கூட, ஆண்குழந்தைக்கான தேர்வு என்பது குறைந்திருக்க வாய்ப்பிருக்கிறதா? ஏற்கெனவே நம் சமுதாயத்தில் ஊறிப்போன "மனப்போக்கு" என்பது நவீன சமத்துவ சிந்தனைகளோடு ஒத்துப்போக இயலாததாக இருக்கிறதா அல்லது நவீன வாழ்க்கை முறையே கூட இதற்குக் காரணமாக இருக்கிறதா? ஒருபக்கத்தில், கரு சோதனை எதிர்ப்பு இயக்கத்தினர், இத்தகைய நெறியற்ற மருத்துவ நடைமுறைகளை கிரிமினல் குற்றமாக அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். அதே நேரத்தில் இன்னொரு பகுதியினர் இப்படிப்பட்ட பாலின தேர்வுக்கான பிரச்சாரம் எப்படி கருத்தடை உரிமைக்கு எதிரானதாகவும் மாறிவிடுகிறது என்று எச்சரிக்கிறார்கள். பொதுவாகவே "பெண்ணினப் படுகொலை" என்பது அதிகரித்துவிட்டது என்று ஒரு பகுதியினர் எச்சரிக்கிறார்கள். இன்னொரு பகுதியினர் இதற்கு மாறான நிலை உருவாகியிருப்பதாகக் கூறுகின்றனர்.

## நடைமுறைகளின் சங்கமம்

இதுவரை நடந்துள்ள விவாதங்களிலும், மேற்கொள்ளப்பட்ட நிலைபாடுகளிலும் புதிரான சில அம்சங்கள் இருக்கவே செய்கின்றன. மாற்றங்கள் நிகழ்ந்துவிடும் என்று நாம் எந்த அடிப்படையில் எதிர்பார்க்கிறோம்? ஒருவர் தனது குழந்தை எந்தப் பாலினத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும், எத்தனை குழந்தைகள் இருக்க வேண்டும் என்பதைத் திட்டமிடுவது என்பது நிச்சயமாக பல்வேறு நடைமுறைகளின் கூட்டு விளைவாகவே அமைகிறது. அவரது வரம்புக்குட்பட்ட வருவாய், தனது குழந்தைக்கு மிகச் சிறந்த வசதிகளை வழங்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு, இதனாலேயே குழந்தைகளால் ஏற்படும் சுமை, அளவுக்கு அதிகமான சமூகப் பொருளாதார கட்டாயங்கள், நபருக்கு நபர்

மாறுபடுகிற அறநெறிகள், அதில் கிடைக்கிற பல்வேறு தொழில்நுட்பங்கள், சமகால சமுதாயத்திலும் வர்க்க வேறுபாடின்றி காணப்படுகிற பாலின பாகுபாடு போன்ற பல்வேறு அம்சங்கள் இதில் பங்களிக்கின்றன. ஆண் குழந்தைதான் வேண்டும் என்று தேர்வு செய்கிற பழக்கம் குறைந்து வருவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக நிறையவே சொல்லப்படுகிறது. மேலும் மேலும் பல குடும்பங்கள் தங்களுக்கு ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் வேண்டுமென்று கூறத் தொடங்கியுள்ளனர். ஆனால், "குறைந்தது ஒரே ஒரு மகன், அத்துடன் ஒரு பெண்" என்பதாக நிலைபாடு எடுக்கும்போது, இப்படிப்பட்ட விருப்பங்கள் எப்படி மாறும் ? மேலும், உண்மையிலேயே ஒரு அடிப்படையான மாற்றம் நடந்துவருகிறது என்று எதிர்பார்க்கத்தக்க வகையில் எப்படிப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் ?

ஏற்கெனவே சுட்டிக்காட்டியதுபோல மத்திய உள்துறை அமைச்சகச் செயலர், குழந்தை பாலின விகிதத்தில் ஏற்பட்டுள்ள சரிவானது அரசு தனது கொள்கைகளை மறுஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார். கவலையளிக்கும் இந்த எண்ணிக்கைகளில் ஒரு சம நிலையை ஏற்படுத்துவது தொடர்பாக, அதற்கான அவசியம் தொடர்பாக மிகப்பெரும் அளவிற்கு கவனம் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இதில் மறக்கப்பட்டுவிட்ட அம்சம் என்னவென்றால், அதிகரித்துவரும் நமது மக்கள் தொகையில், திருமணம் என்பதே ஒரு செலவுமிக்க சந்தை ஏற்பாடாக மாறியிருக்கிற சூழ்நிலையில், திருமணத்திற்குத் தயாராகவுள்ள பெண்கள் எந்தவொரு அமைப்பிலும் கூடுதலாக இருக்கும் நிலையில் அடுத்தடுத்த தலைமுறைகளில் ஆண் குழந்தைகளுக்கே கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதுதான். அதாவது நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கண்ணுக்குத் தெரியாத வகையில் சமத்துவமற்ற ஒரு கட்டமைப்பு நிலை வந்திருக்கிறது. வடமேற்கு மாநிலங்களுக்கு வெளியே இவ்வாறு நிகழ்ந்திருக்கிறது. ஆனால் "சரி செய்யப்படவேண்டிய" ஒரு பிரச்சனையாக இது ஒருபோதும் எடுத்துக்கொள்ளப்பட்டதில்லை. அதேநேரத்தில் ஒரு ஆக்கபூர்வமான பாலின விகிதம் கொண்டுள்ள கேரளத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளும் அதிகமாக உள்ளன என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயமாக இருக்கிறது. பாலின விகிதங்கள், கருவுறுதல், எழுத்தறிவு ஆகியவை குறித்த எல்லா விவாதங்களிலும் ஒரு முக்கியமான பிரச்சனை குறித்து போதிய கவனம் செலுத்தப்படவில்லை.

நமது நாட்டில் பாலின நிலை என்பதற்கான முக்கியமான குறியீடு என்ன என்பது பற்றி போதிய கவனம் செலுத்தப்படவில்லை. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தேசிய மாதிரி ஆய்வு (66வது ஆய்வு, 2009 – 10) ஒரு அதிர்ச்சியளிக்கும் உண்மையை வெளிப்படுத்துகிறது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு கடந்த 20 ஆண்டுகளில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ள நிலையிலும், எந்த ஒரு துறையை எடுத்துக்கொண்டாலும் அதில் ஊதியம் பெறும் ஊழியர்களாக உள்ள பெண்களின் இடம் என்பது 15 சதவீதத்திற்கு மேல் போகவில்லை என்பதுதான். அதாவது 85 சதவிகித பெண்கள் யாரையாவது சார்ந்திருக்க வேண்டிய கட்டமைப்புக்கு உட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள் என்றும் இதைச் சொல்லலாம். ஊதியம் பெறும் வேலையில் இருக்கும் பெண்களும் கூட எப்படிப்பட்ட வேலைகளைச் செய்கிறார்கள் என்பது குறித்து இனிமேல்தான் நாம் விவாதிக்க வேண்டும். ஆகவே இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு சமநிலை உருவாகிவிட்டதாக மிகையாகப் பேசுவதைவிடுத்து, இன்று உண்மையில் தேவைப்படுவது என்னவெனில், பெண் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் அர்த்தமுள்ள வாழ்க்கை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்துவதாக அரசுக் கொள்கைகள் அமையவேண்டும் என்பதுதான்.

## Note

By way of comparison, consider the latest concerns surrounding the demographics of our great neighbour China. China is still the most populous country in the world, and, moreover, has had the worst skewed sex ratios the world has ever seen. This has been laid at the door of its heavily administered one child policy, which resulted in practices such as sex selection to ensure that the only child was a boy. Interestingly, current demographic concerns being voiced are primarily focusing on the very consequences of a one child policy per se. China is now beginning to be an aging population, with too few people in the working age to support too large a proportion of older people. News reports have referred to a 20 year old special experiment in rural Shanxi province where families were actively encouraged to have more than one child. But, according to this report, especially given the level of earnings of a working class family, very few of them were interested in a second child, and fertility

patterns in that region have shown little difference from the rest of the country! While the consequences of the skewed sex ratio are also briefly discussed, it is this willed desire for just one child that is now seen to threaten China's future development (Deccan Herald 2011).

## *References*


*Deccan Herald (2011): "China's Reduced Birthrate May Soon Work Against It", Deccan Herald, 9 April.*

*John, Mary E, Ravinder Kaur, Rajni Palriwala, Saraswati Raju and Alpana Sagar (2008): Planning Families, Planning Gender: The Adverse Child Sex Ratio in Selected Districts of Punjab, Haryana, Himachal Pradesh, Rajasthan and Madhya Pradesh, Books for Change.*


***- Economic & Political Weekly, 16th April 2011***

# உணவுக்காக ஏங்கும் சோமாலியா

– ஜான்செரியன்

கடந்த 60 ஆண்டுக்காலத்திய மிக மோசமான வறட்சிக் காலத்தைத் தற்போது சந்தித்து வரும் சோமாலியாவில் ஐந்து வயது நிரம்பாத சுமார் 29000 பச்சிளங் குழந்தைகள் மிக மோசமான உணவுப்பற்றாக்குறைக் காரணமாக மிக மோசமான உணவுப் பற்றாக்குறைக் காரணமாக மரணமடைந்து விட்டன. நீடித்து வரும் வறட்சி, நீண்டகாலமாய் தொடரும் வன்முறைக் கலவரங்களுக்கு அஞ்சி பல்லாயிரக்கணக்கான சோமாலியர்கள் கென்யா, எத்தியோப்பியா மற்றும் ஜிபௌத்தி போன்ற அண்டை நாடுகளுக்கு அடைக்கலம் தேடி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். 32 இலட்சம் சோமாலியா மக்கள் தங்களது உணவுக்காகக் கையேந்திக் காத்திருப்பதாக ஐ.நா. அறிக்கை கூறுகிறது.

**தற்போது சோமாலியாவில் 5 லட்சம் குழந்தைகள் பட்டினிச்சாவு ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர்களுக்கு செப்டம்பர் மாதம்வரை உணவு வழங்கிட 30 கோடி டாலர் வேண்டுமெனவும் ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது.**

சோமாலியாவில் தற்போது 6,40,000 குழந்தைகள் ஊட்டச் சத்துக் குறைபாடு காரணமாக வாடிக்கொண்டிருக்கும் நிலையில், உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை இன்னும் கூடும் என ஐ.நா. அச்சம் தெரிவித்துள்ளது.

சோமாலியாவில் மூன்றில் ஒரு குழந்தை சத்துக்குறைபாடு கொண்டுள்ளது எனவும் கடும் வறட்சி காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை குறித்து சரியான தகவல் இல்லாத நிலையில், பல்லாயிரக்கணக்கான மக்கள் மடிந்து விட்டதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. ஏற்கனவே வறட்சி பாதித்துள்ள இரு மாநிலங்களோடு கூடுதலாக மூன்று மாநிலங்கள் இணைந்து, தற்போது வறட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்து விட்டதாகவும், வறட்சியால் வாடும் மாநிலங்களில் பெரும்பாலானவை தென்பகுதிகள்தாம் எனவும் ஐ.நா. அறிவித்துள்ளது. அதோடு கென்யாவிலும் சுமார் 40 இலட்சம் மக்கள் வறட்சியை எதிர் நோக்கியுள்ளதாகவும், இந்த வறட்சி இந்த ஆண்டு இறுதி வரை நீடிக்கலாம் எனவும் கணித்துள்ளது.
“பலதலைமுறைகளாகக் காணாத கடும்பஞ்சத்தில் தவிக்கும் ஒரு கோடியே பத்து லட்சம் மக்கள் உயிர் வாழ்வதற்காகக் கையேந்தி நிற்கிறார்கள். உலக சமுதாயம் உடனடியாக அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும்” என ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார். 32 இலட்சம் மக்கள் உடனடி உணவு உதவிக்காக ஏங்கி நிற்கிறார்கள் என ஐ.நா. அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

தற்போதைய சோமாலிய வறட்சி கடந்த 60 ஆண்டுகளில் முன்னெப்போதுமில்லாத அளவுக்குக் கடுமையான வறட்சியாகும் என வல்லுனர்கள் கூறுகின்றனர். நாட்டின் விளைநிலங்கள் மிகுந்த வளமானப் பகுதிகளில் தொடர்ச்சியாகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் மழை பொய்த்துப் போனதே, இத்தகைய கடும் வறட்சிக்கு காரணமாக அமைந்துவிட்டது. ஏதிலிகளுக்கான ஐ.நா. வின் ஆணையர் அன்டோனியோ கட்டர்ஸ் ’இந்தப் பகுதியில் தொடர்ந்து நீடித்துவரும் வறட்சியும், வன்முறையும் இன்றைய மானுட உலகிற்கு முன்னுள்ள மாபெரும் சவாலாகும்’ எனத் தெரிவித்துள்ளார்.

பஞ்சம் என்பது பெருகி வரும் பசிக்கொடுமை, ஊட்டச் சத்துக்குறைபாடு மற்றும் உயிரிழப்புகள் போன்றவற்றால் அளவிடப்படுகிறது. மேலும் அது ஓரிடத்திலிருந்து பல பகுதிகளுக்குப் பரவி வருவதாக இருக்க வேண்டும் என்பது ஒரு அடிப்படைக் கோட்பாடு. நுட்பமாகச் சொல்வதானால், 10,000 மக்கள் தொகையில் அன்றாடம் ஏறத்தாழ இரண்டு சதவீதம் பேர் உயிரிழப்பதும், ஐந்து வயதுக்கும் குறைவான குழந்தைகளில் 30 சதவீதம் பேர் உணவுப் பற்றாக்குறையால் வாடுகிற சூழலும் பஞ்சம் எனப்படுகிறது. தற்போது சோமாலியாவில் 5 லட்சம் குழந்தைகள் பட்டினிச்சாவு ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர்களுக்கு செப்டம்பர் மாதம்வரை உணவு வழங்கிட 30 கோடி டாலர் வேண்டுமெனவும் ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது.

பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்க இந்த ஆண்டு இறுதிக்குள் குறைந்தது 1 பில்லியன் டாலர் நிதியேனும் அளிக்கப்பட்டாக வேண்டுமெனத் தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. எனினும் இப்பஞ்சம் குறித்து உலக சமுதாயம், குறிப்பாக மேற்குலகம் அவ்வளவாக அக்கறை காட்டுவதாக இல்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட சர்வதேச தொண்டு நிறுவனங்கள் கோரியபோது ஐந்தில் ஒரு பங்குக்கும் குறைவான மக்களுக்கே உதவி கிட்டியது.

’பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வது என்கிற சர்வதேச சமுதாயத்தின் பொறுப்புணர்வில் ஒரு துயர்மிகுந்த வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது.’ என்று

ஆக்ஸ்ஃபார்ம் சர்வதேச உதவி நிறுவனத்தின் இயக்குனர் ஃபிரான் ஈக்விஸா ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார். கிழக்கு ஆப்ரிக்காவில் தற்போது நிகழ்ந்து வரும் துயர்மிகுந்த பஞ்சத்தைப் போக்குவதில் சர்வதேச சமுதாயம் போதிய வேகத்தோடு செயல்படத் தவறிவிட்டது. இந்தக் கடும் வறட்சிக்கான முன்னறிவிப்புகள் கடந்த பல மாதங்களுக்கு முன்னதாகவே தென்படத்துவங்கி விட்டன. இப்போது அது கடும் பஞ்சம் என ஐ.நா. அறிவிக்கும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்துவிட்டது. பெரும் அளவுக்கு உயிரிழப்புகள் ஏற்படக்கூடிய அறிகுறிகள் இப்போதே தோன்றத்து வங்கிவிட்டன.

ஐ.நா.வின் நிதி உதவியோடு செயல்படும் 'வறட்சி எச்சரிக்கை அமைப்பு' சர்வ தேச சமுதாயத்தையும், சோமாலியாவின் அண்டை நாடுகளையும் வரவிருக்கிற சோமாலியப்பஞ்சம் குறித்து கடந்த ஓராண்டில் 6 முறைகள் எச்சரித்துள்ளது. ஆனால் இந்த எச்சரிக்கைகள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்துவிட்டது. இந்த நிலையை மேலும் சிக்கலாக்கும் விதத்தில் சோமாலியாவில் உணவுப் பொருட்களின் விலை மூன்று மடங்கு உயர்ந்து, ஒரு சாதரண சோமாலியக் குடிமகன் சத்தான உணவு என்பதையே, நினைத்துப் பார்க்க இயலாமல் போய்விட்டது.

சோமாலியாவில் ஆப்பிரிக்க ஒன்றியப் படைகளை எதிர்த்துப் போரிடும் அல்சபாப் (இளைஞர்) என்ற இஸ்லாமிய இயக்கம், சர்வதேச உதவி நிறுவனங்கள் மற்றும் மேற்குலக ஊடகங்கள் கூறுகிற அளவிற்கு மிகக் கடுமையான பஞ்சம் சோமாலியாவில் இல்லை எனக் கூறுகிறது. அல்கொய்தாவுடன் தொடர்புள்ளதாகக் கூறப்படும் அல்சபாப் தனது ஆளுகைக்குள் உள்ள பகுதிகளில் 'உலக உணவுத் திட்ட' அலுவலர்கள் நுழைவதற்கு அனுமதி மறுத்துவிட்டது. அல்சாபாப் இயக்கம் அண்மைக்காலம் வரையில் சோமாலியத் தலைநகர் மொகதிசுவின் பெரும் பகுதிகளைத் தன் ஆதிக்கத்தில் வைத்திருந்தது. அல்சபாப் கலகப் படைகள் கடந்த ஆகஸ்ட் மாதத் துவக்கத்தில் போர்தந்திரக் காரணங்களுக்காகத் தன் படைகளைச் சற்றே பின்வாங்கச் செய்து, 'தாக்குவது பின்னர் ஓடுவது' போன்ற நடவடிக்கைகள் மூலம் ஆப்பிரிக்க ஒன்றிய படைகளால் பாதுகாக்கப்பட்டு வருகிற அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட 'இடைக்கால ஐக்கிய அரசாங்கத்தை' நிலைகுலையச் செய்து வருகின்றன. இந்த எதிர்ப்பு படைகள் சோமாலியாவின் முக்கியமான நகரங்கள் பலவற்றையும் அதனைச் சுற்றியுள்ள ஊரகப் பகுதிகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன. நீண்டகாலமாக நீடித்துவரும் பஞ்சம், வன்முறை ஆகிய கூட்டுத் தாக்குதல்களிலிருந்து தப்பிக்க பல்லாயிரக்கணக்கான சோமாலிய மக்கள் கென்யா, எத்தியோப்பியா மற்றும் ஜிபௌத்தி போன்ற அண்டை நாடுகளுக்கு அடைக்கலம் நாடி ஓடுவது தொடர்வதால், தற்போது இக்கலகப்படைகள் தன் ஆதிக்கத்தின் கீழுள்ள தெற்கு மற்றும் மத்திய சோமாலியப் பகுதிகளுக்குள் உதவி நிறுவனங்கள் உணவுப் பொருட்களை வினியோகிப்பதை அனுமதிக்கத் துவங்கியுள்ளன.

அல்சாபாப் தலைமை, தன் கட்டுப்பாட்டு எல்லைக்குள் உள்ள வறட்சிப் பகுதிகளில் தொண்டாற்ற ''வெளியில் அறிவிக்கப்படாத குறிக்கோள்கள்'' இல்லாத தொண்டு அமைப்புகளுக்கே அனுமதி என அறிவித்துள்ளது. இக்கலகப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள 'பைதோவா' நகரத்திற்குள் ஐ.நா. அமைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கும் அல்சபாப் ஆளுகைக்குள் உள்ள பெரும்பாலான பகுதிகளில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்துள்ளது. சோமாலியாவின் மரபார்ந்த வளமான பூமியான ஷாபெல் வட்டாரம் மற்றும் வளைகுடாப் பகுதிகளில் கூட கடும் பஞ்சம் ஏற்பட்டு 5 வயதிற்கும் குறைவான குழந்தைகளில் 11 சதவீதம் பேர் ஊட்டச் சத்துக் குறைபாடால் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வ தேச செஞ்சிலுவை சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பொருளாதாரப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் அந்திரே ஹீத் 'சோமாலியாவில் தற்போது நிலவும் கடும் வறட்சி மற்றும் நீடித்து நடக்கும் உள்நாட்டுப் போர் மற்றும் கலவரங்கள் இணைந்துள்ள கொடுமையான சூழலை இனியும் தாக்குப் பிடிக்க இயலாத அளவுக்கு சோமாலியர்கள் மனவலிமை இழந்துவிட்டனர்' என்கிறார். பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி நடவடிக்கைகள் தேக்கமடைவதற்கு நாம் அல்சபாப் இயக்கத்தை மட்டுமே குறை கூறமுடியாது. ஏனென்றால் உதவிக்கான பொருள் வருவாய் பற்றாக்குறையாக இருப்பதே அதற்கான உண்மையான காரணமாகும் என உதவிப் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் கூறகின்றனர்.

**சோமாலியாவின் மரபார்ந்த வளமான பூமியான ஷாபெல் வட்டாரம் மற்றும் வளைகுடாப் பகுதிகளில் கூட கடும் பஞ்சம் ஏற்பட்டு 5 வயதிற்கும் குறைவான குழந்தைகளில் 11 சதவீதம் பேர் ஊட்டச் சத்துக் குறைபாடால் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வ தேச செஞ்சிலுவை சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

உதவிப்பொருட்களை வினியோகிப்பதற்கு ஏற்படும் சிரமத்தைவிட, அவற்றை வெளியிலிருந்து கொண்டுவந்து சேர்ப்பதுதான் மிகக் கடினமானதாக உள்ளது என செஞ்சிலுவை சங்கப் பணியாளர்கள் கூறுகின்றனர். இடைக்கால அரசுக்கு எதிராகப் போராடும் அல்சபாப் கலகப்படைகளுக்கு எந்தவிதமான பொருள் உதவியும் கிடைக்கக்கூடாது என்ற நோக்கில் உதவி நிறுவனங்கள் உதவிப் பொருட்களை வெளியிலிருந்து தருவிக்க அமெரிக்கா ஏகப்பட்ட தடைகளும், விதிகளும் விதித்துள்ளதே இதற்குக் காரணம்.

2008 ஆம் ஆண்டு முதல் பயங்கரவாத அமைப்பு என அமெரிக்காவினால் பட்டியலிடப்பட்டுள்ள அல்சபாப் தனது ஆளுகைக்குள் உள்ள பகுதிகளில் உதவி நடவடிக்கைகள் செயல்படுத்தப் படுவதற்கு வரிவிதிக்கிறது. சோமாலியாவின் கென்யா மற்றும் எத்தியோப்பிய எல்லைகளில் அமெரிக்காவின் ஆயுதமும், நிதி உதவியும் பெற்றுள்ள படைகள் நிலைகொண்டிருப்பதால் எல்லைப்பகுதி விவசாயிகள் அச்சமடைந்து விவசாயத்தைக் கைவிட்டது கூட உணவுப் பொருள் பற்றாக்குறைக்கான காரணமாக அமைந்து விட்டது. சோமாலியாவின் பருவமழைக் காலமான செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் உரிய அளவு மழை பெய்திருந்தாலும் கூட தற்போது ஏற்பட்டுள்ள கடும் பஞ்சத்தை எந்த வகையிலும் தடுத்திருக்க இயலாது எனப்பல வல்லுனர்கள் கூறுகின்றனர். கடும் பஞ்சத்தால் ஏற்கனவே உடல் நலிவுற்ற சோமாலியர்கள் விவசாயம் செய்ய இயலாத நிலையில் இருந்தனர். களத்தில் உள்ள சர்வதேச உதவி நிறுவனங்களில் பணியாற்றுவோரின் கூற்றுப்படி சோமாலிய மக்களில் பெரும்பாலானோர் குறைந்தது 2012 இறுதி வரையிலாவது கட்டாயமாக உணவு உதவி அளிக்கப்பட்டாக வேண்டிய கொடுமையான சூழலில் உள்ளனர். சோமாலியா ஒன்றுபட்ட நாடாக நிலையான அரசைக் கொண்டிருந்த காலம்வரையில் இப்பகுதியில் அவ்வப்போது தலைகாட்டும் வறட்சி, பஞ்சம் போன்றவற்றை வெற்றிகரமாகச் சமாளித்து வந்தது.

2006 ஆம் ஆண்டு இசுலாமிய நீதிமன்றங்களின் ஒன்றியம் (ICU) அன்றிருந்த எல்லா இராணுவக் குழுக்களையும் வென்று 15 ஆண்டுகாலமாக இடைவிடாது நிகழ்ந்த வன்முறைக் கலவரங்களுக்கு முடிவுகட்டி ஒரு தற்காலிக அமைதியை ஏற்படுத்தியது. ஆனால் இந்த அமைதி ஆறுமாதங்களுக்கே நீடித்தது. ஏனெனில் அமெரிக்காவின் புஷ் அரசாங்கம் தெளிவாக விளங்கிக் கொள்ள இயலாத பின்னணியில் இந்த ‘‘இசுலாமிய நீதிமன்ற ஒன்றியம்’’ ஒரு பயங்கரவாத அமைப்பு என அறிவித்து, இந்த அரசை தூக்கி எறிவதற்காக எத்தியோப்பியா அரசு உடனடியாக சோமாலியாவிற்குள் ஊடுருவ வேண்டுமென ஆணையிட்டது.

இங்கே நிகழ்ந்த விதியின் விளையாட்டைப் பாருங்களேன். அமெரிக்காவால் பயங்கரவாத அமைப்பு என அறிவிக்கப்பட்ட ’இசுலாமிய நீதிமன்ற ஒன்றியத்தின் தலைவர் ’ஷேக் ஷரீப்ஷேக் அகமது இன்று’ சோமாலிய நாட்டின் அதிபராயிருக்கிறார். அவரது அரசைக் காப்பாற்றிட வாளேந்தும் வீரனாக அமெரிக்கா போரிடுகிறது. ’இசுலாமிய நீதிமன்ற ஒன்றியத்தின்’ படைப்பிரிவான அல்சபாப் தனது முன்னாள் தலைவர் சேக் அகமது அரசை வீழ்த்தப் போராடுகிறது.

சோமாலியாவின் பஞ்சத்தால் வாடுகிற மக்களில் பெரும்பாலானோர் வடகிழக்கு கென்யாவிற்கு அடைக்கலம் நாடி ஓடுகிறார்கள். அங்குள்ள, சோமாலியாவில் உள்நாட்டுப் போர் துவங்கிய காலகட்டமான 1991ல் கட்டப்பட்ட முகாம்கள் நிரம்பி வழிகின்றன. கென்யா அரசு இதுபோன்ற ஏதிலிகளைத் தனது எல்லைக்குள் அனுமதிப்பதை முதலில் விரும்பவில்லை. ஏனெனில் முகாம்களில் ஏதிலிகள் எண்ணிக்கை அதிகமாகக் குவிந்துவிடும் என்பதோடு ஏதிலிகள் என்ற போர்வையில் அல்சபாப் கலகப் படையினர் கென்யா எல்லைக்குள் ஊடுருவக்கூடும் எனக் கென்ய அரசு அஞ்சுகிறது. கென்ய அரசு எத்தியோப்பியா மற்றும் உகாண்டா ஆகியவற்றோடு இணைந்து அல்சபாப் இயக்கத்தை ஒழித்துக் கட்டுவதற்கான முன்னணிப் படையாகச் செயல்படுகிறது. கடந்த காலத்தில் பிரிவினை வாதம் என்ற தாரக மந்திரத்தை உரத்து முழங்கிய சோமாலிய வம்சாவழியினர் கென்யா மற்றும் எத்தியோப்பியாவில் கணிசமான எண்ணிக்கையில் வசிக்கின்றனர்.

சோமாலியாவில் கடைசியாக ஏற்பட்ட பஞ்சம் 1992ல் நிகழ்ந்தது. அதுவும் கூட வறட்சியால் அல்ல. ஒருவருக்கொருவர் நாசத்தை ஏற்படுத்திக் கொண்ட கலவரங்கள், வன்முறையால் ஏற்பட்டது. அப்போது 3 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் பட்டினியால் மடிந்ததாகத் தகவல்கள் கூறுகின்றன. ஐ.நா. அமைப்பு சோமாலியப் பஞ்சத்திற்குத் தீர்வு காணத் தானே நேரடியாகக் களம் இறங்க வேண்டும் என உலக சமுதாயம் கருதுகிறது. உணவுப் பொருட்கள் சாலை வழியாகச் சென்றடைவது கடினம் என்ற நிலை ஏற்பட்டால், வறட்சி மோசமாக பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கும் பகுதிகளுக்கு உணவுப் பொருட்களை விமானம் மூலம் நேரடியாகக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். அல்சபாப் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்குள் உதவிப்பணியாளர்கள் செல்வது கூடாது என்ற வாஷிங்டனின் முந்தைய முடிவு காரணமாக பசியால் வாடும் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற மனிதநேய நடவடிக்கைகளுக்குக் கடும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளது.

**– ஃபிரண்ட்லைன் 2011 செப்டம்பர் 23**

# சமமான சீரான கல்வி: கனவா, நனவா?

**– முனைவர் ச.சீ. ராஜகோபாலன்**

திமுக தனது 2006ம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையில் தமிழகத்தில் சமச்சீர் கல்வி கொண்டு வரப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தது. இலவச வண்ணத் தொலைக்காட்சி போன்ற இதர வாக்குறுதிகளை செயல்படுத்தத் தொடங்கிய திமுக அரசு சமச்சீர் கல்வியைக் கொண்டுவருதற்குத் தயங்கியது. வலிமை வாய்ந்த சுயநிதி, கட்டண வசூல் தனியார் மெட்ரிகுலேசன் பள்ளிகள் அதற்குக் குறுக்கே நின்றன. இந்த வர்த்தக ரீதியான பள்ளிகளுடன் பல அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் இதர பல அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிராகச் செயல்பட அரசு விரும்பவில்லை.

ஆனால், மூத்த கல்வியாளர்களும் சமூக ஊழியர்களும் சமச்சீர் கல்வியைக் கொண்டுவருமாறு அரசை நிர்ப்பந்தித்தனர். இதற்கு ஆதரவாக இந்திய மாணவர் சங்கத்தினர் மாநிலம் முழுவதும் போராட்டங்களில் ஈடுபட்டனர். அவர்கள் காவல்துறையின் கொடூரத் தாக்குதல்களுக்கு இலக்காகினர், பலர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். காவல்துறையினரின் தடியடிக்கு அரசு வருத்தம் தெரிவிக்கவில்லை, எந்த ஒரு அமைச்சரும் மருத்துவமனைக்குச் சென்று காயம்பட்டோருக்கு ஆறுதல் கூறவில்லை. மாணவர் போராட்டங்கள் பெருமளவுக்கு மக்கள் கவனத்தை ஈர்த்ததைத் தொடர்ந்து, பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. முத்துக்குமரன் தலைமையில் உயரதிகாரக் குழு ஒன்றை அரசு அறிவித்தது.

தமிழகத்தில் தான் நான்கு விதமான கல்வி வாரியங்கள் உள்ளன. அரசு கல்வி நடுநிலைக்கல்வி வாரியம் (எஸ்எஸ்எல்சி), மெட்ரிகுலேசன் வாரியம், ஆங்கிலோ இந்திய வாரியம், ஓரியன்டல் வாரியம் ஆகியவையே அவை.

1977ல் எம்ஜிஆர் ஆட்சிக்கு வந்தபோது அரசு கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்தது. மதிய உணவுத் திட்டத்திலிருந்து 'கேர்' நிறுவனம் விலகியதைத் தொடர்ந்து, அரசின் முழு நிதி ஒதுக்கீட்டோடு மதிய உணவுத் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக வேறு பல செலவுகள் கடுமையாக வெட்டப்பட்டன. புதிய அரசுக் கல்லூரிகளைத் திறப்பதில்லை, அரசு நிதியதவி பெறும் கல்லூரிகளையும் புதிதாக அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. புதிய கல்லூரிகள் அனைத்தும் சுயநிதிக்கல்லூரிகளாகவே இருக்கும் என முடிவு செய்யப்பட்டது.

அதே நேரத்தில் மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் வந்துகொண்டிருந்த நிலையில், பல்கலைக் கழகத்தில் நுழைவதற்கான தகுதியாக மெட்ரிகுலேசன் படிப்பு இருந்தாக வேண்டும் என்ற நிலைமை மாறி வருவதாக சென்னைப் பல்கலைக்கழகம் கருதியது. மெட்ரிகுலேசன் தேர்வுகளைத் தனது பொறுப்பில் நடத்திவந்த சென்னைப் பல்கலைக்கழகம் 1978 முதல் அதை நிறுத்திக்கொள்ளப்போவதாகவும் அறிவித்தது. தனியார் பள்ளிகள் மாநில அரசின் பள்ளிக் கல்வி வாரியத்திலோ, மத்திய பள்ளிக் கல்வி வாரியத்திலோ (சிபிஎஸ்இ) அல்லது வேறு ஏதேனும் ஒரு வாரியத்திலோ இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. ஆனால் அன்றைய தமிழக அரசு மெட்ரிகுலேசன் பள்ளி முறையைத் தனியாக தனது சொந்த வாரியத்தின் கீழ் தொடர்வது என்று முடிவு செய்தது. மேலும் தனியார் நிறுவனங்கள் புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளைத் திறப்பதற்கு அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்டன. அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளே இனி புதிதாக எதுவும் கிடையாது என்ற நிலை உருவானது.

இந்தக் கொள்கை புதிய பள்ளிகளைத் தானே திறந்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திலிருந்து அரசாங்கத்தை விடுவித்தது. ஆனால் மெட்ரிகுலேசன் பள்ளிகள் வதவதவெனப் பெருக வழிவகுத்தது. 1978ல் இருந்த மெட்ரிகுலேசன் பள்ளிகளின் எண்ணிக்கை 40. இன்று சுமார் 4,000 பள்ளிகள் உள்ளன. தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சி நடுத்தரவர்க்க மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியது. ஆங்கில வழி கல்வி இருந்தால்தான் இந்தத்துறையில் வேலை கிடைக்கும் என்ற எண்ணத்தின் காரணமாக மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்குப் பலரும் படையெடுக்கத் தொடங்கினர்.

ஆங்கிலோ இந்திய சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் தபால், தந்தி, ரயில்வே, காவல் ஆகிய துறைகளில் வேலைக்குச் சேரவும் பெண்கள் ஆசிரியப் பணி, செவிலியர் பணி, தட்டச்சு உதவியாளர் போன்ற வேலைகளில் சேரவும் உதவியாக ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இந்தப் பள்ளிகளில் ஆங்கிலத்தின் தரம் மற்ற பள்ளிகளை விட உயர்வாகவே இருந்தது. ஆனால் கணிதம், அறிவியல் ஆகியவற்றில் தரம் குறைவாக இருந்தது. நாட்டின் சுதந்திரத்திற்குப் பிறகு புதிய ஆங்கிலோ–இந்தியப் பள்ளிகள் எதுவும் திறக்கப்படவில்லை. ஆங்கிலோ இந்திய சமூகத்தின் மக்கள் தொகையும் குறைந்துவந்ததைத் தொடர்ந்து அந்த சமூகத்திலிருந்து வருவோர் எண்ணிக்கையும்

குறைந்தது. அவற்றை ஆங்கிலோ–இந்தியப் பள்ளிகள் என்று அழைப்பதே காலத்துக்கு ஒவ்வாததாகிவிட்டது. இன்று 41 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் மட்டுமே உள்ளன.

ஓரியன்டல் பள்ளிகள் மக்களில் ஒரு பகுதியினருக்கு மட்டுமே சேவைசெய்பவையாகும். தங்களது பிரிவின் மதம் மற்றும் கலாச்சாரம் சார்ந்த மரபுகளோடு தங்களது குழந்தைகள் தொடர்புகொள்ள வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அவர்கள். ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இப்பள்ளிகளில் எஸ்எஸ்எல்சி வாரியம் போன்ற பாடத்திட்டங்களும், தேர்வு முறைகளுமே உள்ளன. ஆனால் முதல் மொழியாக சமஸ்கிருதம் அல்லது அரபு அல்லது உருது மொழி இருக்கும். சில பள்ளிகளில் அரபு, உருது இரண்டுமே கற்பிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட ஓரியன்டல் பள்ளிகளின் எண்ணிக்கை வெறும் 28 மட்டுமே.

கோத்தாரி ஆணையம் ஒரு பொதுப்பள்ளி முறையை பரிந்துரைத்ததால், இந்த 4 வாரியங்களையும் இணைத்து ஒரே வாரியமாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கான இயக்கம் உருவெடுத்தது. தனியார் பள்ளிகளின் மிக அதிகமான கட்டணங்கள், பொது வாரியம் தேவை என்ற கோரிக்கையைத் தீவிரப்படுத்தின. அரசுக்கு மனமில்லை என்றாலும் இந்தக் கோரிக்கையை ஏற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் விளைவாகவே தற்போதைய சர்ச்சைக்குரிய சமச்சீர் கல்வி வந்தது.

கல்வியில் சமத்துவமற்ற நிலை ஏற்படுவதற்குக் காரணமான பல்வேறு அம்சங்களை உயர் அதிகாரக் குழு ஆய்வு செய்தது. திமுக அரசு தேர்ந்தெடுத்த முறையில் தனது அணுகுமுறையை அமைத்துக் கொண்டு ஒரு தரப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் என்பதோடு சுருங்கிக் கொண்டது. இதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தையும் பாட நூல்களையும் புதிய அரசும் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகங்களும் எதிர்த்தன. உச்சநீதிமன்றம் தனது தெளிந்த ஞானத்தோடு இந்தப்பாடத் திட்டத்தையும் பாடநூல்களையும் அங்கீகரித்துள்ளது. புத்தகங்களை அரசு மறு ஆய்வு செய்யலாம் என்றும், தேவைப்படக்கூடிய மாற்றங்கள் அல்லது நீக்கல்கள் பற்றி 3 மாதத்திற்குள் பள்ளிகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறுகிறது.

சமத்துவமற்ற கல்விக்கு காரணமான இதர அம்சங்கள் இனியும் காலதாமதமின்றி கவனத்தில் கொள்ளப்படவேண்டும். பொதுவாரியம் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் இதர 4 வாரியங்களும் பொது வாரியத்தை விட அதிக வலுவோடு தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கும். இந்த வாரியங்களின் அனைத்து செயல்பாடுகளும் பொது வாரியத்தின் கட்டப்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும்.

பலவகைப் பாடப்புத்தகங்களை உயர் அதிகாரக் குழு பரிந்துரைத்துள்ளது. எனினும் அந்தப் புத்தகங்களை தனியார் பதிப்பகங்கள்தான் வெளியிட வேண்டும் என்று அக்குழு பரிந்துரைக்கவில்லை. தனியார் பாடப்புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் பெரும் ஊழல்களில் ஈடுபட்டதன் காரணமாகவே அரசு தனியார் பாடப்புத்தகங்களைத் தடுத்து, தரமான புத்தகங்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதற்காக தமிழ்நாடு பாடநூல் கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்தியது. இந்தக் கழகம் கடந்த ஆண்டுகளில் பாராட்டத்தக்க பணிகளைச் செய்துவந்தது. முன்பு இரண்டுவிதமான பாடநூல்கள் வெளியிடப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழக வட்டாரத்திற்கு என ஒன்றும், மதுரை காமராஜர் பல்கலைக்கழக வட்டாரத்திற்கு ஒன்றும் என கொண்டுவரப்பட்டன. அதே போல் பலவகைப் பாடநூல்களைக் கொண்டுவருகின்ற பொறுப்பும் இந்தக் கழகத்திற்குத் தரப்பட்டிருந்தது. பாட ஆசிரியர்களை கழகம் தானே தேர்வு செய்வதற்கு பதிலாக பாடங்களின் கையெழுத்துப்படிகளை கேட்டுப் பெற்று அவற்றிலிருந்து 5 அல்லது 6 பாடங்களை தேர்வு செய்து வெளியிட முடியும். இது ஆசிரியர்களிடையே உள்ள உள்ளார்ந்த திறமைகளைப் பயன்படுத்த வழிவகுக்கும்.

தேர்வு முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து அரசு இன்னும் முடிவுசெய்யவில்லை. கேள்வித்தாள் வடிவத்துடன் மாதிரி வினாத்தாள்கள் மேற்கொண்டு தாமதமின்றி தயாரிக்கப்பட்டு, பள்ளிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

பொதுப்பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் இல்லாதது சமத்தவமின்மைக்கான மற்றொரு காரணமாகிறது. 2009ஆம் ஆண்டின் கல்வி உரிமைச் சட்டம் அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய விரும்பத்தக்க செயலாக மழலையர் பள்ளி பற்றி குறிப்பிடுகிறது. எனவே உயர் அதிகாரக்குழு பரிந்துரைக்கு ஏற்ப அனைத்தப் பொதுப்பள்ளிகளிலும் இந்த பள்ளிக்கு முந்தைய வகுப்புகள் (மழலையர் வகுப்புகள்) தொடங்கப்பட்டாக வேண்டும்.

சமத்துவமின்மைக்கு காரணமாகவுள்ள ஒரு மிகப்பெரும் அம்சம் பயிற்றுமொழி. உயர் அதிகாரக்குழு தமிழ்தான் ஒரே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரையை செயல்படுத்த மிகப்பெரும் அளவிற்கு அரசியல் உறுதியும் தமிழ்மீது நேசமும் தேவைப்படுகின்றன. இரட்டை பயிற்றுமொழிகள் இருப்பது கல்வி வாய்ப்புகளில் சமத்துவமின்மையை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் குழந்தைகளிடையே ஒரு வர்க்கப் பிரிவினையை வளர்க்கிறது. இதில் அரசு உடனடியாக ஒரு உறுதியான முடிவெடுத்தாக வேண்டும்.

அரசுப்பள்ளிகள் சரியாக செயல்பட முடியாமல் இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இல்லை என்பதே ஆகும். இந்தப் பாடத்திட்டமானது ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு ஆசிரியர் இருப்பார் என்ற யூகத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் தொடக்கப் பள்ளிகளைப் பொருத்த வரையில் 5 வகுப்புகளுக்கு 2 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். தனியார் பள்ளிகளிலோ முழுமையானத் தகுதி இல்லையென்றாலும் கூட ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு ஆசிரியர் இருக்கிறார். இது குழந்தைகளின் கற்றல் திறனில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. 1995ம் ஆண்டு வாக்கில் அன்றைய பிரதமரால் அனைவருக்கும் கல்வி குறித்து விவாதிப்பதற்காக கூட்டப்பட்ட அனைத்து மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு ஆசிரியர் என்பதே தமது அரசின் நோக்கம் என்று கூறினார். அந்த வாக்குறுதியை அவர் நிறைவேற்ற வேண்டிய தருணம் வந்துவிட்டது.

தமிழக அரசின் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அரசுப்பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் எதுவும் சேர்க்கப்படவில்லை. பெரும்பாலான பள்ளிகள் பழுதுபார்க்க இயலாத நிலையில் உள்ளன. பெரும்பாலான பள்ளிகளில் போதிய வகுப்பறைகளும் கிடையாது. இந்தப்பிரச்சனைக்கு அவசர முக்கியத்துவத்துடன் தீர்வு காண்பதன் மூலமாகவே இந்தப் பள்ளிகளை சிறப்பாக செயல்படக் கூடியவையாக மாற்ற முடியும்.

சமமான தரமான கல்வி என்ற இறுதி லட்சியத்தை அடைவதற்கு மிக நீண்ட பயணம் தேவைப்படுகிறது. ஆனால் இது தவிர்க்கக் கூடியதல்ல. காலவரம்பிற்குட்பட்ட செயல்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு உணர்வுப்பூர்வமாகவும், அவசர முக்கியத்துவத்துடனும் செயல்படுத்தப்பட்டாக வேண்டும்.

## அரசு புள்ளி விவர புத்தகத்தில், 'திடுக்'

**→ குடிநீர் வசதியில்லாத அரசுப் பள்ளிகள் – 4,085**

**→ கழிவறைகள் இல்லாத அரசுப் பள்ளிகள் – 2,248**

அடிப்படை தேவைகளான குடிநீர், கழிவறை உள்ளிட்ட வசதிகள் தேவைப்படும் அரசுப் பள்ளிகள் குறித்து, தமிழக அரசு கணக்கெடுத்துள்ளது. பள்ளிக் கல்வித்துறை செய்முறைத் திட்டம் மற்றும் புள்ளி விவர கையேடு, சட்ட சபையில் நேற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. அதில், தமிழகத்தின் கல்வி நிலையை விளக்கும் வகையில் புள்ளிவிவரங்கள் இடம் பெற்றுள்ளன. அதன் விவரம்:

- தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை 7 கோடியே 21 லட்சம்.
- மாநிலத்தின் எழுத்தறிவு சதவீதம் – 80.33 (ஆண்டுகள் 86.81, பெண்கள் 76.86)
- கன்னியாகுமரி மாவட்டம், 92.14 சதவீதம் எழுத்தறிவு பெற்று முதலிடத்தில் உள்ளது.
- இரண்டாம் இடம் சென்னைக்கு (90.33%) கிடைத்துள்ளது.
- 64.71 சதவீதத்துடன், தர்மபுரி மாவட்டம் கடைசி இடத்தில் உள்ளது. அதற்கு முந்தைய இடங்களில், முறையே அரியலூர் (71.99%), விழுப்புரம் (72.08%) மாவட்டங்கள் உள்ளன.
- தொடக்கப்பள்ளிகள் 34 ஆயிரத்து 226, நடுநிலைப்பள்ளிகள் 10 ஆயிரத்து 614, உயர்நிலைப் பள்ளிகள் 4,557, மேல்நிலைப் பள்ளிகள் 5,560 என மொத்தம், 54 ஆயிரத்து 957பள்ளிகள் இயங்கி வருகின்றன. தொடக்க கல்வித் துறையில், 54 லட்சத்து, 98 ஆயிரத்து 419 மாணவர்களும், பள்ளிக் கல்வித்துறையின் கீழ், 81 லட்சத்து 22 ஆயிரத்து 678 மாணவ, மாணவியரும் படிக்கின்றனர்.
- 31 ஆயிரத்து 816 அரசு பள்ளிகளில் போதுமான வகுப்பறைகள் உள்ளன என்றும், 3,979 பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுகின்றன என்றும், அரசு தெரிவித்துள்ளது. 16 ஆயிரத்து 75 வகுப்பறைகள் கூடுதலாக தேவைப்படுகின்றன. இதில் , 4,444 வகுப்பறைகள், நடப்பு கல்வியாண்டில் கட்டப்பட உள்ளன.
- 14 ஆயிரத்து 836 பள்ளிகளில் தளவாட சாமான்கள் முழுமையாக உள்ளன. 14 ஆயிரத்து 16 பள்ளிகளில், ஓரளவுக்கு உள்ளன. 6,943 பள்ளிகளில், தளவாட சாமான்களே இல்லை என்றும் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2,248 பள்ளிகளில் கழிவறை வதி இல்லை.
- 1,510 பள்ளிகளில் குடிநீர் வசதி, இல்லை.

இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, நடப்பு கல்வியாண்டில், 1820 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**– தினமலர்,24.8.2011**

# சந்தி சிரிக்கும் கல்விக் கட்டணம்

தனியார் பள்ளிகளில் கல்விக் கட்டணக் கொள்கையால் ஆண்டுதோறும் தொல்லைப்பட்டு வந்த பெற்றோர் ஓங்கி குரல் கொடுத்ததால் கடந்த திமுக அரசு தனியார் பள்ளிகளுக்கான கல்விக் கட்டணத்தை முறைப்படுத்த நடவடிக்கை எடுத்தது. அரசு இதற்காக ஒரு சட்டமே இயற்றியது.

இந்த சட்டத்தின் கீழ் உயர்நீதிமன்றம் முன்னாள் நீதிபதி கோவிந்தராஜன் தலைமையில் ஒரு கமிட்டியை அரசு அமைத்தது. இந்த குழுவில் பள்ளிக்கல்வி இயக்குநர், தொடக்க கல்வி இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், பொதுப்பணித்துறையின் இணை தலைமைப்பொறியாளர் (கட்டடம்) ஆகியோர் பதவி வழி உறுப்பினர்களாக அந்தக் குழுவில் இடம்பெற்றனர். பள்ளிக் கல்வித் துறையின் இணைச்செயலாளர் பதவி வழி உறுப்பினர் செயலாளராகவும் அரசால் நியமனம் செய்யப்பட்டனர்.

இதையடுத்து கட்டண நிர்ணய குழு, சென்னை டிபிஐ வளாகத்தில் உள்ள பெற்றோர் ஆசிரியர் கழக கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது. முதற்கட்டமாக இந்த குழு கடந்த 2009ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதற்கூட்டத்தை நடத்தியது. அதில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பேரில் தமிழகத்தில் உள்ள சுமார் 10934 தனியார் பள்ளிகளுக்கு தகவல் கேட்டு படிவங்கள் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அது தவிர கூடுதல் விவரம் பெறுவதற்கான மற்றொரு வினாப்படிவமும் அனைத்து பள்ளிகளுக்கும் கொடுக்கப்பட்டது.

மேற்கண்ட வினாப்படிவங்களை பெற்ற தனியார் பள்ளிகளும் அந்தப்படிவங்களில் கேட்கப்பட்டு இருந்த விவரங்களை கவனமுடன் பூர்த்தி செய்து அனுப்பின. அதில் 10223 பள்ளிகளில் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை கட்டணக்குழுவிற்கு சமர்ப்பித்தனர். மீதம் உள்ள பள்ளிகளில் சிலர் மட்டும் இந்த கட்டண நிர்ணயத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர். சுமார் 700 பள்ளிகள் கடைசிவரை வினாப்படிவங்களை குழுவிடம் கொடுக்கவில்லை.

இந்த நிலையில், நீதிபதி கோவிந்தராஜனும், அவரை தொடர்ந்து ரவிராஜபாண்டியனும் கட்டணங்களை நிர்ணயித்தனர். ரவிராஜன் கமிட்டியால், புதிய கல்விக் கட்டணம் வெளியிடப்பட்டது. அதன் பின் சில பள்ளிகள் தங்களுக்கு 20 முதல் 50 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது, திருப்திகரமாக உள்ளது என்று தெரிவித்தனர். ஆனால் பல பள்ளிகள் தங்களுக்கு கட்டணம் போதவில்லை, என்றும் புதிய கட்டண விகிதம் மூலம் பள்ளிகளை நடத்த முடியாது என்றும் தெரிவித்தனர். மேலும் இந்தக் கட்டணத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்போவதாக தெரிவித்தனர்.

இதற்கிடையே கட்டண விவரங்களை பள்ளி கல்வி இணையதளத்தில் கட்டண குழு வெளியிட்டது. அதைப்பார்த்த பெற்றோர் ஒவ்வொரு பள்ளிக்கும் விதிக்கப்பட்டு இருந்த கட்டணத்தைத்தான் செலுத்துவோம் என்றனர். அதை தனியார் பள்ளி நிர்வாகங்கள் ஏற்க வில்லை. தாங்கள் கேட்கும் கட்டணத்தை செலுத்தாத குழந்தைகளை அவமரியாதை செய்தனர். இது போன்ற யுத்தங்களை எதிர்கொள்ள மாணவர் பெற்றோர் சங்கம் என்று சங்கங்களை தொடங்கினர். அந்த சங்கங்கள் மூலம் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை சந்தித்து அடாவடி பள்ளிகள் மீது புகார்கள் கூறினர். ஆனால் அந்தப் பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கட்டணக் குழுவுக்கு இல்லை என்பதே உண்மை.

மேற்கண்ட பெற்றோரின் புகார் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை

## புது கட்டணத்தை ஏற்க சில பள்ளிகள் மறுப்பு

தனியார் பள்ளிகளுக்கான கட்டணம் நிர்ணயித்த பிறகு கடந்த 2010 மே 7ம் தேதி இந்த கட்டணம் வெளியிடப்பட்டது. இதற்கான உத்தரவுகள் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம் அந்தந்தப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்தக் கட்டணத்தில் திருப்தி இல்லாத பட்சத்தில் 15 நாட்களுக்குள் அந்த பள்ளிகள் கட்டண குழுவிடம் முறையிடலாம் என்றும் கட்டண குழு தெரிவித்திருந்தது.

கட்டண குழுவின் இந்த அறிவிப்பை சில பள்ளிகள் மட்டுமே ஏற்றுக்கொண்டன. ஆனால் 6400 பள்ளிகள் ஏற்க மறுத்து மீண்டும் மேல் முறையீடு செய்தன.

இந்த முறையீட்டு மனுக்கள் மீது நீதிபதி கோவிந்தராஜன் கமிட்டி மீண்டும் விசாரணை நடத்தத் தொடங்கியது. இதற்காக 20 ஆடிட்டர்கள் நியமிக்கப்பட்டனர். இந்நிலையில் தனியார் பள்ளிகள் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், 05.10.2010க்குள் மேல் முறையீட்டு மனுக்கள் மீது நேரடி விசாரணை நடத்தி இறுதி ஆணை வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துவிட்டது.

## செலவு அடிப்படையில் பள்ளிகள் பிரிப்பு

பின்னர் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் மற்றும் ஒரு சிறப்பு அலுவலர் மேற்பார்வையில் ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனியாக நிர்ணயம் செய்ய வேண்டிய கட்டணம் குறிப்பிடப்பட்டது. இறுதியாக ஒவ்வொரு பள்ளியின் விவரமும் கட்டணக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது ஒவ்வொரு பள்ளிகளும் அளித்த மொத்த வருவாய் குறித்த விவரத்தின் பேரில் கணக்கிடப்பட்டு, அந்த பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையால் வகுத்து, ஒவ்வொரு மாணவருக்கும் சராசரி வருமானம் மற்றும் செலவினம் கணக்கிடப்பட்டது.

இதன்படி பள்ளிகள், செயல்படும் வகுப்புகள் அடிப்படையில் கீழ்கண்டபடி வகைப்படுத்தப்ட்டன.

- நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளி (எல்கேஜி முதல் 5ம் வகுப்புகள்) – கட்டணம் ` 5000
- நடுநிலைப் பள்ளி (1முதல் 8 வகுப்புகள்) – கட்டணம் ` 8000.
- உயர்நிலைப் பள்ளி (6 முதல் 12 வகுப்புகள்) – கட்டணம் `11000 வரை அதிகபட்சமாக வசூலிக்கலாம். பள்ளிகளின் கட்டண நிர்ணயம் செய்ய செலவினங்களின் அடிப்படையில் கொள்ளும் வகையில் ஏ,பி,சி என பள்ளிகள் வகைப்படுத்தப்பட்டன.
- பள்ளி முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஊதியம்.
- ஆசிரியர் அல்லாத இதரப் பணியாளர்கள் ஊதியம்
- இதர செலவினங்கள்.

மேலும் பள்ளியின் எதிர்கால வளர்ச்சிக்காக 10 சதவீதம் அனுமதிக்கப்பட்டது. இந்த குழுவால் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் 3 ஆண்டுகள் நடைமுறையில் இருக்கும். குழுவின் அனுமதி இல்லாமல் இடைக்காலத்தில் கட்டணத்தை உயர்த்தி வசூல் செய்ய பள்ளிகளுக்கு அதிகாரம் இல்லை என்று கட்டணம் குழு தெரிவித்து இருந்தது.

உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கும் தொடரப்பட்டது. இந்த வழக்கில் 2011 ஆகஸ்ட் 19ம் தேதிக்குள் புதிய தலைவரை நியமிக்க வேண்டும் என்று நீதிமன்றம் தெரிவித்தது.

இதையடுத்து அவசரம் அவசரமாக கடந்த 7ம் தேதியே புதிய தலைவரை அரசு நியமித்தது. அதன்படி ஓய்வு பெற்ற நீதிபதி சிங்காரவேலு கடந்த 8ம் தேதி பொறுப்பேற்றுக்கொண்டார். சமச்சீர் கல்வி தொடர்பான குழப்பம் முடிந்து இப்போதுதான் பள்ளிகள் அமைதியான சூழ்நிலைக்கு திரும்பியுள்ளன. இந்நிலையில் ஒவ்வொரு பள்ளியும் தாங்கள் வசூலித்த கட்டணத்திற்கு ஏற்ப புத்தகங்கள், நோட்டுகளை இன்னும் வழங்கவில்லை.

இனிமேல் வழங்கியாக வேண்டும். அப்போது சமச்சீர் கல்வி பாடப்புத்தகங்களை வழங்கினால், பெற்றோர் தாங்கள் செலுத்திய அதிக கட்டணத்தையும், புத்தகங்களின் மதிப்பையும் கணக்கிட்டுப் பார்க்கத் தொடங்குவார்கள். அப்படி பார்க்கும் பட்சத்தில் மீண்டும் கட்டணம் குறித்த சர்ச்சை எழும்.

இது தவிர சில பள்ளிகள் டேர்ம் பீஸ் கேட்டால் அப்போதுதான் கட்டண விவகாரம் பூதகரமாக எழும். இதனால் கட்டண கமிட்டிக்கு புதிய தலைவலி உண்டாகும். கூடுதல் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் மீது எந்த மாதிரி நடவடிக்கை பாயும் என்பதெல்லாம் புதிய நீதிபதி சிங்காரவேலுவுக்கு பெரும் சவால்களாக இருக்கும்.

கட்டண கமிட்டி நிர்ணயித்த கட்டணம் குறித்து பள்ளிகள் அரசிடம் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்றதும் தெரிவித்தார். இதன்படி பார்த்தால் பள்ளிகளின் நலன் மட்டுமே பார்க்கப்படுமா என்ற கேள்வி எழும். அப்படியானால் நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த பெற்றோர் மற்றும் அவர்களின் குழந்தைகளின் நிலை என்ன ?

அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து விட்டதால், கட்டண கமிட்டியின் தலைவராக உள்ள நீதிபதிக்கு அதிகாரம் இல்லையா ? இவற்றை எல்லாம் புதிய தலைவர் நீதிபதி சிங்காரவேலு சிந்திப்பாரா ? எப்படிதான் சமாளிக்கப்போகிறார் ?

## கட்டணம் நிர்ணயிக்க மூன்றாவது கமிட்டி

முதலில், நீதிபதி கோவிந்தராஜன் தனது பதவியை ராஜினாமா செய்தார். பின்னர் 1.11.2010ல் கட்டண நிர்ணய குழுவின் புதிய தலைவராக நீதிபதி ரவிராஜபாண்டியன் பொறுப்பேற்றார். 15.11.2010 முதல் மேல் முறையீட்டு மனுக்கள் மீது நேரடி விசாரணையை நடத்தினார். இந்த விசாரணை 2011, ஏப்ரல் மாதம் வரை நடந்தது. இதையடுத்து கடந்த 10.6.2011ல் தனியார் பள்ளிகளுக்கான இறுதி ஆணைகள் வழங்கப்பட்டன.

இதற்கிடையே தமிழக சட்ட மன்றத் தேர்தல் நடந்தது. மே13ம் தேதி அதிமுக அரசு பொறுப்பேற்றது. புதிய கல்விக் கட்டணம் வெளியிட்ட பிறகு நீதிபதி ரவிராஜ பாண்டியன் தனது பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, நீதிபதி சிங்காரவேலு தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

**– தினகரன், 14.8.2011**

# பெண் கைதிகளின் குழந்தைளுக்கும் சிறை வாழ்க்கை

**முகவுரை :**

குழந்தை என்பது மனிதனுக்குத் தந்தை. குழந்தைகள் வருங்காலத் தலைமுறையின் குடிமக்களாவர். குழந்தைகளை சிறந்த முறையில் வளர்த்தெடுப்பதும், நல்ல குடிமக்களாக வளர உரிய பயற்சிகள் அளிப்பதும் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியக் காரணிகளாகும். ஒரு குழந்தை எதிர்காலத்தில் ஒரு துணிவுமிக்க , துடிப்பான குழந்தைக்குத் தந்தையாக வளர்ச்சி பெற வேண்டுமெனில், அவன் தனது வாழ்வை வடிவமைத்துக் கொள்ளும் பருவகாலத்தில் நன்கு கவனத்தோடு பேணி வளர்க்கப்பட வேண்டும். ஒரு குழந்தை கட்டாயமாகக் கல்வி பெற வேண்டும். அது தக்க சூழலில் வளர்க்கப்பட்டு, சமூகம் மதித்துப் போற்றத்தக்க இலட்சிய வேட்கை கொண்ட ஒரு மலர்ச்சி பெற்ற இளைஞனாகப் பரிணமிக்க அதற்குரிய அறிவாற்றல் சக்தி ஆகியவை அளிக்கப்பட வேண்டும்.1 உயர்கல்விக்குப் பொருந்தாதாயினும், ஆரம்ப கல்வி என்பது அரசின் தனிச்சிறப்பு வாய்ந்த முக்கியமான பொறுப்பாகும்.2 உடல் நலன் பேணப்படுவது , வளமான வாழ்வு, கல்வி மற்றும் சமூக பாதுகாப்புப் ஆகியவைகளுக்கான உரிமைகளோடு, ஒவ்வொரு குழந்தையும், சாதி, பிறப்பு, நிறம், பாலினம், மொழி, வட்டாரம், வம்சாவழி மற்றும் சொத்து ஆகியவை குறித்து எவ்வகை பாகுபாடுகளுக்கும் ஆட்படுத்தப்படக் கூடாது. குழந்தையானது புரிதல் கொண்ட, அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்த குடும்பச்சூழலில் வளர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் சமூகத்தில் தானே தனது சுய வலிமையில் வாழத்தக்க வகையில் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.3

கடந்த சில ஆண்டுகளில் இந்தக் கோட்பாடு மிக உறுதியாக நிலை பெற்றுள்ளது. 1959ஆம் ஆண்டு கூடிய ஐ.நா.பொது அவைக் கூட்டத்திலும், 1966 ஆம் ஆண்டு கூடிய குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச மாநாட்டின் 24வது விதியாகவும் குழந்தை உரிமைகள் குறித்த பிரகடனம் வெளியிடப்பட்டது. குழந்தை குறித்த முக்கியத்துவம் முறையாக அங்கீகரிக்கப்பட்டது. இத்தகைய சர்வதேச சாசன நிகழ்வுகளில், இந்தியா ஒரு பிரதிநிதியாகப் பங்கேற்றதோடு மட்டுமின்றி நமது நாட்டிற்குள்ளும் நாடாளுமன்ற அவைகளின் மூலம் அவற்றை உறுதிப்படுத்தியுள்ளது. இச்சாசனத்தில் குறிப்பிட்டுள்ள குழந்தை உரிமைகளை முறையாக அமலாக்குவது நமது மத்திய, மாநில அரசுகள் முன்னுள்ள கட்டாயக் கடமையாகும்.4

குழந்தைகளுக்கு இப்போது முறையான வளர்ச்சி வாய்ப்பு கிட்டவில்லையெனில், நமது தேசத்தின் எதிர்காலத்தை இருள் சூழ்ந்து விடும். எதிர்கால சகாப்தத்தின் குடிமக்களான குழந்தைகளை சிறந்த முறையில் பேணி வளர்ப்பது ஒவ்வொரு தலைமுறைக்கும் உள்ள கட்டாயக் கடமையாகும். இன்றைய குழந்தைகள் நாளை நமது நாட்டின் மான்பினைக் காப்பதோடு, தேசத்தின் பதாகையை உயர்த்திப் பிடிக்கவுள்ளவர்களாவர். ஒரு குழந்தை முறையான பராமரிப்பு, பயிற்சி, வழிகாட்டுதலின்றி தவறாக சென்றுவிடுமானால் அது இன்றைய சமூகத்தின், அரசாங்கத்தின் செயலின்மையையே சுட்டிக்காட்டுவதாகும். பிரச்சனையான குழந்தை என்பது உண்மையில் ஒரு எதிர்மறைக் காரணியாகும். எனவே ஒவ்வொரு குழந்தையும் வருங்கால சமுதாயத்தில் தனக்குரிய தகுதியான இடத்தை வெல்லத்தக்க வகையில் குழந்தையின் வளர்ச்சிக்கால கட்டத்தில் அது தேவையான பயிற்சி, கல்வி, மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற்று, அக்கறையோடு, முழுமையான கவனத்தோடு பேணிவளர்க்கப்படுவதை உறுதிபடுத்துவது ஒவ்வொரு சமூகத்தின் பொறுப்பாகும்.5 குறிப்பாக சமூக, பொருளாதார உடலியல் மற்றும் உளவியல் அடிப்படைகளில் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உரிய வசதிகள் மற்றும் வாய்ப்புகள் அளிக்கப்படாது போகுமானால், நாடு மனித வளம் மட்டுமல்லாது நல்ல குடிமக்களையும் இழக்க வேண்டிய சூழலுக்கு ஆளாகிவிடும். 6

தன்னைச் சார்ந்துள்ள இளங் குழந்தையோடு ஒரு தாயைச் சிறையிலிடுவது மிகத்துன்பமான சிக்கல் நிறைந்த பிரச்சனையாகும். சிறைக்குள் அடைக்கப்படுவதன் விளைவாகக் குழந்தைகள் தமது வாழ்வில் ஒரு சூறாவளியைச் சந்திக்க நேர்வதோடு, தாயோடு குழந்தைகளையும் பராமரிக்க அரசு கூடுதலாகச் செலவிடுவதும் நேர்கிறது. குழந்தைகள் சிறைச்சாலைகளில் தங்குவதற்கு அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் சிறைகள் குழந்தைகளை வளர்ப்பதற்கான முறையான இடமன்று. சிறைகளில் தமது குழந்தைகளோடுள்ள பெண் கைதிகள் தங்களுக்கான அடிப்படை உரிமைகள், கிடைக்க வேண்டியவைகள் மற்றும் வசதிகள் ஆகியவை மறுக்கப்படுகின்றன.7 சிறைச்சூழல் என்பது குழந்தைகள் வளர்வதற்கான உவப்பான சூழல் அல்ல.8

பெண் கைதிகளின் குழந்தைகள் சிறைச்சூழலில் வளரும் நிலை குறித்து, 1997–2000 ஆம் ஆண்டுகளுக்கிடையே தில்லியைச் சேர்ந்த தேசிய குற்றவியல் மற்றும் தடய அறிவியல் கல்வி நிறுவனம் நடத்திய ஆய்வின் முடிவுகள் அதிர்ச்சி தரத்தக்கதாக உள்ளன. இந்த ஆய்வில் சிறைகளில் உள்ள குழந்தைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும், குற்றச்சூழலுக்கிடையே வளர்ந்தாக வேண்டிய கட்டாய நிலையிலும், சத்தாண உணவு மற்றும் மருத்துவ கவனிப்பு இல்லாமலும் உள்ளதோடு, கல்விக்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ள நிலை பற்றிப் பதிவு செய்யப்பட்டள்ளது.

துரதிர்ஷ்ட வசமாக சிறைக்கைதிகள் என்பவர்கள் எந்தவொரு அரசாங்கத்திலும் முன்னுரிமை பட்டியலில் உள்ளவர்கள் அல்ல. ஏனெனில் சிறையில் உள்ளவர்கள், வறுமை நிலையில் உள்ளவர், கல்வியறிவற்றோர் மேலும் அவர்கள் அதிகாரம் படைத்தவர்களாக இல்லை. மேலும் இன்றைய சமூக வழக்கப்படி கைதிகளுக்கு எந்த அளவுக்குத் தகுதி உள்ளதோ அதுவே அவர்களுக்குக் கிட்டும்.9 இந்தியா குழந்தை உரிமை தொடர்பான தனது கட்டுப்பாட்டை உறுதி செய்யும் நோக்கில் குழந்தைகள் உரிமைகள் தொடர்பான 1992 ஆம் ஆண்டு ஐ.நா. அவை தீர்மானங்களை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த மாநாட்டுத் தீர்மானத்தின் முக்கியமான கோட்பாடு என்னவெனில் ஒவ்வொரு குழந்தைக்கும் இணக்கமான ஆரோக்கியமான சூழலில் வாழ்வதற்கான, வளர்வதற்கான உரிமையளிப்பதாகும்.10

## 2. பெண் கைதிகளின் குழந்தைகள் குறித்த வரையறை :

மும்பையில் இயங்கும் பிரயாஸ் (PRAYAS) என்ற தொண்டு நிறுவனம் பெண் கைதிகளின் குழந்தைகளைக் கீழ்கண்டவாறு வகைப்படுத்தியுள்ளது.

அ. தாயார் சிறை வாசத்தில் உள்ள போது பிறக்கும் குழந்தைகள்

ஆ. தாயாரோடு சிறைக்காவலில் இருக்க அனுமதிக்கப்பட்ட இளஞ்சிறார்.

இ. தாயாரோடு சிறைக்கூடத்தில் வசிக்க அனுமதிக்கப்பட்ட பின்னர், தாயார் சிறையிலேயே இருக்க, தனியே வெளியேற்றப்பட்ட இளஞ்சிறார்

ஈ. தாயாரோடு சேர்ந்து சிறைக்காவல் விதிக்கப்பட்ட இளஞ்சிறார்கள்

உ. தனது பெற்றோர் இருவருமே சிறையில் இருக்க, வெளியே தனித்துவிடப்பட்ட இளஞ்சிறார்கள்

ஊ. தாயார் சிறை வாசத்திலேயே இருக்க வளர் இளம் பருவத்தை எட்டிய இளஞ்சிறார்கள்.

## 3. பெண் கைதிகளின் குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் :

இந்தியச் சிறைகளில் தம் தாயாரோடு இருக்கும் குழந்தைகள் குறித்து தேசிய குற்றவியல் மற்றும் தடய அறிவியல் கல்வி நிறுவனம் ஒரு ஆய்வினை மேற்கொண்டது. ஆய்வில் கண்ட முக்கியமான கருத்துருக்கள் பிப்ரவரி 2002ஆம் ஆண்டு எல்லா அரசுகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. அவையாவன :–

அ. இக்குழந்தைகள் பெரும்பாலானவர்கள் உண்மையில் மிகத்துன்பமான சூழலில் உள்ளனர். மேலும் அவர்களுக்கான போதிய உணவு, உடல்நலம் பேணுதல், இருப்பிடம், கல்வி, பொழுதுபோக்கு ஆகியவை மறுக்கப்பட்ட நிலையில் வாடுகின்றனர்.

ஆ. குழந்தைகளின் உயிரியல், உளவியல் மற்றும் சமூக வளர்ச்சிக்கான திட்டங்கள் அல்லது ஏற்பாடுகள் எதுவும் அவை இருக்க வேண்டிய நிலையில் இல்லை. அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு பெரும்பாலும் அவர்கள் தாயார் மீதே சுமத்தப்படுகிறது. இக்குழந்தைகளை பாதுகாத்து பராமரிப்பதற்கென பயிற்சி பெற்ற பணியாளர் எவரும் எந்தச் சிறையிலும் இல்லை.

இ. பல சிறைச்சாலைகளில் பெண் கைதிகளோடு உள்ள குழந்தைகளுக்கென சிறப்பாகவோ அல்லது கூடதலாகவோ எவ்வித உணவும் வழங்கப்படுவதில்லை. சில சமயங்களில், எப்போதாவது ஒருமுறை இக்குழந்தைகளுக்கென கூடுதலான உணவு, அதுவும் பெரும்பாலும் ஒரு குவளை பால் மட்டுமே அளிக்கப்படுகிறது. சில சிறைச்சாலைகளில் ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே தனியாக உணவு அளிக்கப்படுகிறது. ஆயினும் இது சிறைக்கைதிகளுக்கு அளிக்கப்படும் வழக்கமான தரத்திலேயே இருக்கும்.

ஈ. கருவுற்ற கைதிகளுக்கென சிறப்பான அல்லது பிற வசதிகள் ஏதும் அளிக்கப்படுவதில்லை. பெண் சிறைக்கைதிகள் அனைவருக்குமே ஒரே விதமான உணவு வசதிகள் தாம். அவர்கள் தம் குழந்தைகளோடு இருக்கிறார்களா அல்லது இல்லையா என்பதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல.

உ. சிறைக்குள் இருக்கும் குழந்தைகளுக்கென தனியான அல்லது சிறப்பான மருத்துவ வசதிகள் ஏதும் இல்லை.

ஊ. தாய்க் கைதிகளில் ஒருசிலரைத் தவிர பெரும்பாலோர் தாம் சிறையில் இருப்பது தமது குழந்தைக்கு உடலியல் மற்றும் உளவியல் வளர்ச்சிப் போக்கில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என அஞ்சுகின்றனர்.

எ. எண்ணிக்கை கூடுவதால் ஏற்படும் இட நெருக்கடி, முறையான உணவு, உறைவிட வசதிகள் பற்றாக்குறை இவையாவற்றுக்கும் மேலாக தமது குழந்தைகள் வடிவமைத்துக் கொள்ளும் வேளையில் தனது குழந்தைக்கு தன்னைத் தவிர தனது குடும்ப உறுப்பினர்கள், பிறருடைய அன்பு, குறிப்பாகக் குழந்தையினுடைய தந்தையின் அரவணைப்பு கிடைக்காததால் குழந்தைகள் தமது வளர்ச்சிப் போக்கில் மாபெரும் தடுமாறும் தடைக் கற்களைச் சந்திக்கின்றனர் என்று பெண் கைதிகள் கருதுகின்றனர்.

ஏ. பெண் கைதிகள் தமது குழந்தைகளை முறையாக வளர்த்தெடுக்க ஆறுவகைத் தேவைகளில் அடிப்படையான முன்னேற்றம் கண்டாக வேண்டுமென வரையறுத்துள்ளனர். அவை உணவு, மருத்துவ வசதி, உறைவிடம், கல்வி, பொழுதுபோக்கு ஆகியவற்றோடு குழந்தைகள் வழக்கமான குற்றவாளிகளிடமிருந்து தனியே பிரித்து வைக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்றாகும்.

ஐ. சிறை அலுவலர்கள் எவருக்கும் இதுபோன்ற குழந்தைகள் மற்றும் அவர்களது தாயாரைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்கென தனியே பணி ஒதுக்கி அளிக்கப்படுவதில்லை. அவர்களது வழக்கமான பணிகளான அலுவலகப்பணிகள் நடத்தை விதிகளைப் பராமரித்தல், பாதுகாப்பு தொடர்பான பணிகளோடு கூடவே இவற்றையும் கவனிக்க வேண்டியுள்ளது. சிறைக்குள் இருக்கும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கெனத் தனியே பயிற்சி பெற்ற அலுவலர்கள் இருப்பதாக எவ்விதத் தகவலும் இல்லை.11

## 4. பெண் கைதிகளின் குழந்தைகளுக்கான கல்வி:

குழந்தையின் தாயார் மட்டுமே தவறு செய்து தண்டிக்கப்பட்டவர். அவளது குழந்தை அல்ல. குழந்தைகள் இந்நாட்டின் வருங்காலத்தலைவர்கள். ஆரம்பக் கல்வி பெறுவதற்கான உரிமை என்பது குழந்தைகளின் அடிப்படை உரிமையாகும். எல்லாக் குழந்தைகளும் அவர்களது 14 வயதுவரையில் இலவசமாக, கட்டாயமாகக் கல்விபெற நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசுகளின் பொறுப்பு என நமது அரசியல் சட்டத்தின் 45–வது பிரிவு சொல்கிறது. நமது அரசியல் சட்டத்தை வகுத்தோர், இயல்பாகவே அறிவும் தீர்க்க தரிசனமும் கொண்டவர்களாக இருந்த காரணத்தால், நாட்டிலுள்ள குழந்தைகள் யாவருக்கும் நல்ல முறையில் பேணி வளர்க்கப்படுவதோடு, நல்ல கல்வி அளிக்கும் வாய்ப்பு கிட்டாது போகுமானால் தாம் கனவு காணும் இந்தியா உருவாவது சாத்தியமல்ல என்பதை நன்கு அறிந்திருந்தனர். ஒவ்வொரு குழந்தைக்கும் நல்ல ஆரோக்கியமான சூழலில் வளர்வதற்கான வாய்ப்பு அளிக்கத்தக்க வகையில் நமது அரசியல் சட்டம் மேலும் சில பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.13

**ஒவ்வொரு நாடும், அது மிக வளர்ந்த நாடோ அல்லது வளர்ந்துவரும் நாடோ எதுவாயினும் அதன் வளர்ச்சி என்பது குழந்தையின் வளர்ச்சியோடு தொடர்புடையது ஆகும். குழந்தைப்பருவம் என்பது வருங்காலச் சமுதாயத்திற்கான அடித்தளமாக விளங்குவதோடு, அதன் வளர்ச்சி எல்லையைத் தீர்மானிக்கும் காரணியாகவும் இருக்கிறது.**

இன்றைய குழந்தைக்கு, அவனது சமூகத் தகுதி மற்றும் உடல் நலன் பேணுவதற்கான உரிமை ஆகியவை குறித்த உறுதியான சூழல் இருந்தால் மட்டுமே பெற முடியும். ஒவ்வொரு நாடும், அது மிக வளர்ந்த நாடோ அல்லது வளர்ந்துவரும் நாடோ எதுவாயினும் அதன் வளர்ச்சி என்பது குழந்தையின் வளர்ச்சியோடு தொடர்புடையது ஆகும். குழந்தைப்பருவம் என்பது வருங்காலச் சமுதாயத்திற்கான அடித்தளமாக விளங்குவதோடு, அதன் வளர்ச்சி எல்லையைத் தீர்மானிக்கும் காரணியாகவும் இருக்கிறது. குழந்தைகள் என்பவர்கள் மானுட உலகுக்கு அளிக்கப்பட்ட அருட்கொடையாவர். மனித உலகம் அவர்களைத் தம் கைகளில் தாங்கி நிற்கிறது. பெற்றோர் தம் குழந்தைகளுக்காகவே தாம் உயிர் வாழ்கிறார்கள். பெற்றோர் தம் வாழ்வின் மிகழ்ச்சியைத் தமது குழந்தைகள் வாயிலாகவே காண்கிறார்கள். குழந்தைகளின் கள்ளமில்லாத செயல்களால் தாம் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகள் மற்றும் சோர்வுகளிலிருந்து விடுபட்டு அறுதல் அடைகிறார்கள். குழந்தைகள் மானுட உலகின் நன் நம்பிக்கை அடையாளமாகத் திகழ்கிறார்கள். மானுட வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணமாக எப்போதுமிருக்கிறார்கள். குழந்தைகள் மனித உலகுக்குத் தேவையான பரந்த தகுதிகள், சிறப்புகளைக் கொண்டவர்களாக வளரும் வேளையில், சமூகம் அவர்கள் குறித்த மகிழ்ச்சி கொள்கிறது. குழந்தைகளைப் புறக்கனிப்பது என்பது சமூகத்திற்கு மிக மோசமான கட்டமாக முடிகிறது. குழந்தைகளுக்கு அவர்களது சமூக, பொருளாதார, உடலியல், உளவியல் அடிப்படையிலான உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்களது குழந்தைப்பருவம் இழப்புக்கு ஆட்படுத்தப்படுமானால், அது நாட்டு

முன்னேற்றத்திற்கான மிகச்சிறந்த மனிதவளம் பொருளாதார வலிமை அமைதி, ஒழுங்கு, சமூக நிலைத்தன்மை மற்றும் நல்ல குடிமக்கள் அகியவற்றில் மிக மோசமான சரிவை ஏற்படுத்தும். எனவே நமது அரசியல் சட்டத்தை வகுத்த முன்னோர் வளர்ச்சிக்கான பாதையில் குழந்தைகள் வகிக்கும் பாத்திரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் அளித்துள்ளனர். குழந்தைகளுக்கு ஏற்படுத்தப்படும் இழப்பு என்பது மக்களாட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுக்கு மிகக் கேடு விளைவிப்பதாகும்.14

## 5. குழந்தைகளுக்குக் கல்வியூட்டுவதன் அவசியம்

கல்வி என்பது கல்லாமையை ஒழிப்பதன் மூலம் பொருளாதார வலிமைக்கும், பண்பட்ட வாழ்க்கை முறைக்கும் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. கல்வி மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. அது மக்களிடையே புரிதல் பொறுமை மற்றும் நட்பை வளர்க்கிறது.15 கல்லாமை என்பது மக்களாட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சிக்குக் கேடு விளைவிக்கும். ஒரு சுதந்திரமாக கற்றறிந்த குடிமகன் தனது அரசியல் உரிமைகளைப் பொருளார்ந்த முறையில் பயன்படுத்த இயலும், தனது சமூகப் பொறுப்புகளை நிறைவாகச் செயல்படுத்த முடியும். பொறுமை மற்றும் மறுமலர்ச்சிக்காக தனது உணர்வுகளைத் தக்கவமைத்துக் கொள்ளலாம். எனவே, கல்வி என்பது கட்டாயமாகிறது. எனவே, குழந்தைகளுக்கான ஆரம்பக்கல்வி குறிப்பாக வறிய நிலையில் உள்ள, நலிந்தபிரிவைச் சேர்ந்த, தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பது மிக முக்கியமான கடமையாகும். சமூகத்தின் இப்பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அடிப்படைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவற்றைக் கற்பித்து வலிமையூட்டுவதன் மூலம் அவர்கள் தமது வறுமையிலிருந்து மீட்கப்பட்டு தமது அடிப்படை ஆற்றல், திறன், தகுதிகளைத் தாமே வளர்த்துக் கொண்டு பொருளாதார மற்றும் சமூக அதிகாரித்திற்கான பொருளார்ந்த வாழ்வை நடத்திச் செல்வர். எனவே, இக்குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வி அளிக்க வேண்டுவது அரசின் கொள்கைக் கோட்பாடாகவும், முழுமுதற் கடமையாகவும் செயல்படுத்தப்படுவது மக்களாட்சியின் நிலைத்தன்மைக்கும், சமூக ஒற்றுமை, மற்றும் சமூகப் பதற்றங்களைத் தணிப்பதற்கான அடிப்படையாக அமைகிறது.16

நமது இந்திய அரசியல் சட்டம் குடிமக்களின் சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படைகளில் நீதி பாதுகாக்கப்படும் எனத் தனது முன்னுரையிலேயே உறுதிப்படுத்துகிறது. நமது அரசியல் சட்டத்தின் தனிச் சிறப்பு என்னவென்றால், அது குடிமக்களுக்கான சமூக, பொருளாதார உரிமைகளோடு கூடவே அரசியல் மற்றும் நீதி முறையிலான சட்ட முறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு தொகுப்பாக உள்ளது. சமூக நீதியை நிலைநிறுத்துவது, மக்கள் திரள் சுதந்திரமான நம்பிக்கையான உணர்வில் நிளைத்திருக்குமாறு உறுதி செய்வது ஆகிய கடமைகளை அரசு நிறைவேற்றச் செய்வது பற்றிய குறிக்கோளை உள்ளடக்கியதாக இந்த முன்னுரை உள்ளது. சமூக நீதியைப்பாதுகாப்பது அரசின் இலக்காக இருக்க வேண்டுமென்பதற்காக அரசுப் பொறுப்புப் பிரிவுப்பட்டியலில் தனிச்சிறப்பு வாய்ந்த பிரிவாக அரசியல் சட்டத்தின் 38வது பிரிவு இணைக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் அனைவருக்கும் கல்வியறிவு அளிக்கப்பட்டாலன்றி இந்த அரசியல் சட்ட முன்னுரை சுட்டும் இலக்கை எட்டுவது இயலாது. போய் அது காகிதத்தில் மட்டும் நிலைத்திருக்கும் கருத்துரையாக இருக்கும். இந்த அரசியல் சட்ட முன்னுரை உறுதியளிக்கும் மூன்று வகையான நீதிகள் என்பவை கல்வியறிவில்லாத கோடிக்கணக்கான மக்கள் முன்பு ஒரு கற்பனையாகத்தான் தோன்றும். கல்வியறிவு மட்டுமே ஒரு மனிதனை, இந்த முகவுரையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கான ஆற்றல் படைத்தவனாக மாற்றும். மேலும் இந்த முன்னுரை தனியொரு மனிதனின் மான்பு மதிக்கப்படுவது குறித்து உத்தரவாத மளிக்கிறது. ஒவ்வொரு தனி மனிதனும் தனது மாண்பு பாதுகாக்கப்படுவது குறித்து தேவையானால் நீதி மன்றம் செல்ல இயலும் வகையில் அடிப்படை உரிமைகள் குறித்த உறுதியளிக்கிறது. அரசியல் சட்டத்தின் பிரிவு 4–ன் வழிகாட்டு விதிகள் கூட இதையே சுட்டிக் காட்டுகின்றன. ஒரு மனிதனின் மாண்பு என்பது குலைக்கப்படக்கூடாது ஒன்று பிரதானமாக கல்வியறிவே ஒரு மனிதனின் மான்பை நிலைநிறுத்துகிறது. நாட்டின் அரசியல் சட்டம் எவருக்காக வகுத்தளிக்கப்படகிறதோ, அந்த எழுபது சதவீதம் மக்கள் கல்வியறிவற்ற அவல நிலையில் உள்ளனர் என்பதை நமது அரசியல் சட்டத்தை வடிவமைத்தவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

மேலும் அவர்கள், ஒரு பத்தாண்டு காலத்திற்குள்ளாகவே நாடு முழுமையிலும் கல்வி அறிவின்மை முற்றாக முடிந்து விடும் என நம்பிக்கை கொண்டிருந்தனர். அந்த நம்பிக்கையில் தான் அரசியல் சட்டத்தின் நான்காம் பிரிவுக்குட்பட்ட விதிகள் 41 மற்றும் 45 ஆகியவை எழுதப்பட்டுள்ளன. ஒருவரின் மாண்பு பாதுகாக்கப்படவேண்டுமானால் அவரது தனித்தன்மை வளர வேண்டும். அதற்கான ஒரே வழி அவருக்குக் கல்வியறிவு புகட்டுவதுதான். எனவே தான் 1948–ஆம் ஆண்டின் மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகடனம் கல்வியறிவு என்பது மனிதனின் தனித்தன்மையை வளர்த்தெடுப்பதை நோக்கிச் செல்ல வேண்டும் எனமிக அழுத்தமாக அறிவித்துள்ளது. நமது அரசியல் சட்டத்தின் 4வது பிரிவின் 41வது விதி தனியொரு மனிதனின் கல்விக்கான உரிமையை அங்கீகரிக்கிறது. அரசு தனது பொருளாதார வலிமை மற்றும் வளர்ச்சி எல்லைகளுக்கு உட்பட்டு கல்விக்கான உரிமையை பயன்மிக்க வகையில் செயல்படுத்தலாம் என்று சொல்கிறது. நமது அரசியல் சட்டத்தின் 4வது

பிரிவில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளைக் கட்டாயமாகச் செயல்படுத்த வேண்டுமென உரிமை கோர இயலாது என்றாலும் கூட இந்த வழிகாட்டு நெறிமுறைகள் மக்களை வஞ்சிக்கும் நோக்கில் வகுக்கப்பட்டவையல்ல.17

இந்திய நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நடப்பதும் நமது தேசிய சின்னங்கள், நிறுவனங்களுக்கும், தேசியக் கொடி மற்றும் தேசிய கீதம் ஆகியவற்றுக்கும் மதிப்பளிக்க வேண்டியதும் கட்டாயக் கடமையாகும் என அரசியல் சட்டத்தின் பிரிவு 4–ஏயின் விதி 51 ஏ உறுதியாகக் கூறுகிறது. நமது தேசிய விடுதலைப் போராட்டத்தை நினைவு படுத்தும் புனிதச் சின்னங்களைப் பாதுகாப்பதும் அவற்றுக்கு மதிப்பளித்தலும் வேண்டும். நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை உயர்வாகப் போற்றுதல் வேண்டும். நாட்டைப் பாதுகாப்பதோடு, அழைக்கப்படும் போது நாட்டுக்காகப் பணியாற்ற முன்வருவதும் குடிமகனின் கடமையாகும். மதம், மொழி, வட்டார, இன வேறுபாடுகளைக் கடந்து அனைத்துமக்களிடையே சமூக நல்லிணக்கத்தை பொது சகோதரத்துவத்தை வளர்க்கவும் பாடுபடவேண்டும். பண்முகத்தன்மை வாய்ந்த நமது மிகச் செழுமையான பண்பாட்டு மரபைப் பாதுகாப்பதும் மதிப்பளிப்பதும் வேண்டும். வாழும் உயிரினங்கள் அனைத்தின் மீதும் கருணை கொள்வதோடு காடுகள், ஏரிகள், ஆறுகள் வன விலங்குகள் உள்ளிட்ட சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் செயல்படுதல் வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் அறிவியல் அடிப்படையிலான தன்மை, மனித நேயம் எதையும் ஆய்வு செய்து தெளிவாக்கிக் கொள்வது மற்றும் மாறுதலுக்கான வேட்கை ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். பொது சொத்துக்களைப் பாதுகாப்பதோடு வன்முறையை உறுதியாகத் தவிர்க்க வேண்டும். நாட்டின் முயற்சிகள் மற்றும் வெற்றிகளை அடுத்தடுத்த நிலை நோக்கி உயர்த்தும் வகையில், ஒவ்வொரு தனி மனிதனும் தனிப்பட்ட வகையில் மட்டுமல்லாது கூட்டுச் செயல்பாடுகளிலும் கூட எல்லா விதங்களிலும் சிறப்புத் தேர்ச்சியைப் பெற தொடர்ந்து பாடுபட வேண்டும். இத்தகைய உயர் மதிப்பு மிக்க சின்னங்கள் குறித்து குழந்தைப் பருவத்திலிருந்தே உரிய முறையில் போதிக்கப்பட்டு குழந்தைகள் அவற்றைத் தமது சிந்தையில் நன்கு பதியச் செய்து கொள்ளுமளவுக்குப் பயிற்றுவிக்கப்படவேண்டும்.18

நமது அரசியல் சட்டத்தின் மூன்றாம் பிரிவு உறுதி செய்யும் அடிப்படை உரிமைகளிலிருந்து, ஆட்சியமைப்புக்கான அடிப்படை வழிகாட்டு நெறிகளைத் தனியே பிரித்துப்பார்க்க இயலாது. இந்த ஆட்சிக்கான வழிகாட்டு முறைகள் அடிப்படை உரிமைகளோடு இணைத்தும் பார்க்கப்பட வேண்டும். இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவையாகும். அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்த அரசு அதே சட்டத்தின் பிரிவு 3–ன் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ள தனி நபர் உரிமைகளை அனைவரும் துய்க்குமாறு நிலைமைகளை மேம்படுத்த வேண்டும். அரசியல் சட்டத்தின் விதி 41 குறிப்பிட்டவாறு 'கல்வி கற்பதற்கான உரிமையை' உண்மையில் நடைமுறைப்படுத்தினாலன்றி பிரிவு 3–ல் குறிப்பிட்டுள்ளவையாவும், பெரும்பாலான மக்கள் கல்வியறிவு பெறாத19 நிலையில் அவர்களைச் சென்றடையாது.

### 6. அளிக்கப்பட வேண்டிய கல்வியின் தன்மை:

கல்வி என்பதைப் பொறுத்தவரை அது தனது குணநலன்களை செம்மைப் படுத்திக் கொள்ளும் வகையில் அறிவாற்றல், அறத்தின் பாற்பட்ட ஒழுங்கு மற்றும் உடல் வலிமை ஆகியவற்றை வளர்த்திட உதவிடும் செயல் முறை ஆகும். சமூக அந்தஸ்தை உயர்த்திட முன்னேறவும், சமூக சமத்துவத்தையும், மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கி சமூக மாற்றத்திற்காக செயல்படச் செய்யும் ஒரு வாய்ப்பும் ஆகும். கல்வியானது அறிவாற்றல், அறம் மற்றும் சமூக ஜனநாயகத்தை வளர்க்கிறது. நல்ல குடிமகனாக வளர்வதற்கான அடித்தளமாக கல்வி இருக்கிறது. குழந்தை தனது அறிவாற்றல், பண்பாட்டு வழிமுறைகள் ஆகியவை குறித்த விழிப்புணர்வைப் பெறவும். தொழிலியல் பயிற்சி பெற்று புதிய சூழலுக்கேற்ப தன்னைத் தயார் செய்து கொள்ளவும் உதவுகிறது கல்வி. எனவே கல்வியானது சமூகமாற்றத்திற்கான ஒருகருவியாகப் பயன்படுத்தக் தக்கவகையில், சாதியம், மொழி வெறி, மற்றும் மதவெறி ஆகிய தடை வேலிகளைத் தகர்த்து மதச் சார்பின்மையைப் பேணிக்காக்கும் வழிமுறையில் வளர்ந்து வரும் நமது நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் தேவைகளை ஈடு செய்வதாக இருக்க வேண்டும்.

**சிறைகளில் தமது குழந்தைகளோடுள்ள பெண் கைதிகள் தங்களுக்கான அடிப்படை உரிமைகள், கிடைக்க வேண்டியவைகள் மற்றும் வசதிகள் ஆகியவை மறுக்கப்படுகின்றன.**

கல்வி ஒருவரது ஆற்றலை மேன்மேலும் வளர்த்துக் கொள்வதற்கான கர்வத்தை அணையவிடாது காக்கிறது. அவன் அல்லது அவளது அறிவை இயங்கச் செய்வதோடு மட்டுமின்றி அதனைக் கூர்மைப்படுத்துகிறது. அதன் மூலம் அவன் அல்லது அவளது குருட்டு நம்பிக்கை களைத் தகர்த்தெரிந்து, அறிவு மட்டத்தை உயர்த்துகிறது. மேலும். சமூக சமத்துவம் மற்றும் மனிதமான்பு20 குறித்த கோட்பாடுகளை அவர்கள் மனதில் மிக ஆழமாகப் பதியச் செய்கிறது.

...இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் – 61



*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**

**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*New # 10, Old # 109, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905, E-mail : humanrightsfoundation@yahoo.co.in*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*